Registered as a Newspaper

விதயன்

சுடர் : 37
கதிர் : 130

செவ்வாய்க்கிழமை
05 ஏப்ரல் 2022

பங்குனி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ.40

ஆளும் தரப்பினரின் வீடுகள் முற்றுகை

கொழும்பு, ஏப். 5

அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், அமைச்சர்கள் பதவி 10

அமெ.வில் கோத்தாவின் மகனின் வீட்டுக்கு முன்பாக போராட்டம்

கொழும்பு, ஏப். 5

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் 10

பதவி துறந்தார் கப்ரால்

கொழும்பு, ஏப். 5

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து அஜித் நிவாட் கப்ரால் விலகியுள்ளார். அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் பதவிவிலகி 15

4 அமைச்சர்கள் பதவியேற்பு 3 பேர் முன்னைய பதவியில்

கொழும்பு, ஏப். 5

முழுமையான அமைச்சரவை நியமிக்கப்படும் வரை, நாடாளுமன்றம் மற்றும் நாட்டின் ஏனைய செயற்பாடுகளை சட்டரீதியாகவும் நிலையாகவும் பேணுவதற்காக நான்கு 15





அரசியல் பதற்றத்தின் உச்சக்கட்டம் இன்று

- பரபரப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் கூடுகிறது
- அரசு கவிழ்வதற்கு வாய்ப்பு?
- போராட்டக்காரர்களால் நாடாளுமன்றம் முற்றுகையிடப்படும்?

கொழும்பு, ஏப்ரல் 5

இலங்கை அரசியல் கொதிநிலையை அடைந்துள்ளது. மக்கள் போராட்டங்களும் தீவிரம் பெற்றுள்ள நிலையில் நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசு இன்று கவிழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. 15

திரும்பும் திசையெல்லாம் போராட்டம்; கொழும்பில் நேற்றிரவு பெரும் பதற்றம்

சுதந்திர சதுக்கம், ஜனாதிபதி செயலகம், பிரதமர் இல்லம் நாடாளுமன்ற உறுப்பினர் குடியிருப்பு ஆகியன சுற்றிவளைப்பு

கொழும்பு, ஏப். 5

ஜனாதிபதியின் மீரிஹான இல்லத்தின் மீதான தாக்குதலுடன் நாடு முழுவதும் தன்னெழுச்சி போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. நாட்டின் அனைத் 15

டக்ளஸின் சிறிதர் தியேட்டர் போராட்டக்காரர்களால் முற்றுகை

- 'கோத்தா கள்ளன்' என்ற கோஷம் எழுப்பிய யாழ். பல்கலை மாணவர்கள்
- தொழில்நுட்பக் கல்லூரியினரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் 10

மக்கள் போராட்டத்தில் பிரபலங்களும் இணைவு

கொழும்பு, ஏப். 5

அரசுக்கு எதிராக நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டங்களில் கிரிக்கெட் வீரர் 11

போராட்டக்காரர்களுடன் இணைந்த பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஏப். 5

கொட்டாவ பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுடன் பொலிஸ் அதிகாரி 14

69 இலட்சம் பேரின் ஆணை கோத்தாவுக்கு இருக்கிறதாம்

அவர் பதவி விலகத் தேவையில்லை என்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன்

கொழும்பு, ஏப். 5

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 69 லட்சம் பேர் ஆணை வழங்கியுள்ளனர். 15



பெரும்பான்மையை நிரூபித்தால் ஆட்சியை ஒப்படைக்கத் தயார்! ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 5

நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சியிடம் ஆட்சியைக் கையளிக் 15

மஹிந்தவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பணிப்பு

கொழும்பு, ஏப். 5

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட 42 பேரை உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் தற்போ 15

அரசிலிருந்து வெளியேறியது சிறிலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஏப். 5

அரசிலிருந்து வெளியேறி, சுயாதீனமாக செயற்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி 15

மஹிந்தவின் கார்ல்டன் இல்லமும் முற்றுகை

பொலிஸ் தடைகள் தகர்ப்பு

கொழும்பு, ஏப். 5

அம்பாந்தோட்டை தங்காலை கார்ல்டன் இல்லத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தவும் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்கவும் பொலிஸார் கண்ணீர் புகை 14

நொருக்கப்பட்டது எம்.பி.யின் வீடு

துப்பாக்கிச் சூட்டில் பிக்குவுக்கு காயம்

கொழும்பு, ஏப். 5

பொலநறுவை மாவட்டத்திலுள்ள ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அபேயசிங்க 14

கோத்தாவின் கோரிக்கை எதிர்த்தரப்புக்களால் நிராகரிப்பு

காபந்து அரசு யோசனை பிசுபிசுப்பு

கொழும்பு, ஏப். 5

அமைச்சுப் பதவிகளை ஏற்று காபந்து அரசில் இணையுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடுத்த அறிவிப்பை எதிர்க்கட்சிகள் 15

புதிய அமைச்சரவை மாற்றம்

புதிய போத்தலில் பழைய மது

உதயகம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5

புதிய அமைச்சரவை என்பது புதிய போத்தலில் உள்ள பழைய மது. இதுதொடர்பில் மக்கள்தான் தீர்மானம் எடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



நேற்றுமுன்தினம் இரவு அமைச்சரவை அமைச்சர்கள் பதவிவிலகல் கடிதத்தைக் கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்று தற்காலிக அமைச்சரவைக்குச் சில அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த, முன்னர் சில அமைச்சுப் பொறுப்புகளை வகித்தவர்களுக்கே மீண்டும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகத் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எங்களது கோரிக்கையானது அத்தியாவசிய சேவைகளை மீளமைப்பதற்கும், நாடாளுமன்றத் தேர்தலொன்றுக்குச் செல்வதற்குமான இடைக்கால அரசொன்றை நிறுவுவதே.

அடுத்த தலைவர்களை மக்களே தீர்மானிக்க வேண்டும், வேறு யாரும் அல்லர் என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



தடுமாறும் பங்குச் சந்தை

கொழும்பு, ஏப்.5

கொழும்பு பங்குச் சந்தையின் நாளாந்த பங்குச்சந்தைப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகியபோதும் 2 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குச் சந்தைச் சுட்டெண் குறைந்ததன் காரணமாகப் பங்குச் சந்தைப் பரிவர்த்தனை சுமார் 30 நிமிடங்களுக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் நாளாந்தப் பரிவர்த்தனை முற்பகல் 11.02 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. (எ-இ)

சீலரத்ன தேரரை திருப்பி அனுப்பிய மக்கள்

கொழும்பு, ஏப்.5

பத்திரமுல்லயில் மக்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்த சீலரத்ன தேரரை காலில் விழுந்து திருப்பி அனுப்பி வைத்தனர் மக்கள்.

கடந்த காலங்களில் சீலரத்ன தேரர் கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஒருவராவார்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை அடுத்து, அரசாங்கம் பதவிவிலக வேண்டும் என்று கோரி நாடு முழுவதும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பத்திரமுல்லயில் நேற்று மக்கள் தன்னெழுச்சியாக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டபோது, அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள சீலரத்ன தேரரும் வந்துள்ளார். அவரை அந்த இடத்தில் நிற்கவிடாது பொதுமக்கள் அனுப்பி வைத்தனர். (எ-இ)

ஆளும் கட்சிக்குள் முரண்பாடு பஸிலைத் திட்டும் எம்.பிக்கள்!

கொழும்பு, ஏப்.5

தற்போது அரசாங்கம் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், ஆளும்கட்சிக்குள் கடும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்கள் அரசியல் எதிர்காலம் தொடர்பான அச்சத்தில் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைத்து அமைச்சர்களும் தங்கள் பதவிவிலகல் கடிதங்களைக் கையளித்திருந்தனர்.

ஆயினும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச பதவி விலகல் கடிதத்தில் கையொப்பம் இடவில்லை அல்லது கையொப்படமிட மறுத்துவிட்டார் என்று அறியமுடிகின்றது. அதேநேரம் ஜி. எல். பீரிஸ் மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் அந்தச் சந்தர்ப்பத்தில் கையொப்பம் இடவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடுமையாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவைத் திட்டினார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ள ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ச சகோதரர்கள் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

மெல்ல நழுவும் எம்.பிக்கள்

கொழும்பு, ஏப்.5

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் உத்தேச புதிய அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

இன்று நாடாளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தாம் தொடர்ந்தும் சுதந்திரமாக நாடாளுமன்றத்தில் செயற்படுவோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

சமூக வலைத்தளங்கள் முற்றாக முடங்கலாம்!

தொழில்நுட்ப அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.5

பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் தமது நெறிமுறைகளை மீறும் வகையில் செயற்படும்போது சமூக ஊடகங்களின் பாவனையை நாட்டில் முற்றாகத் தடை செய்யமுடியும் என தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகத்தில் தனிப்பட்ட உறவுகளை வளர்ப்பது போன்ற இலக்குகளின் அடிப்படையில் சமூக ஊடகங்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆயினும் சமூக ஊடகங்களை வன்முறைச் செயல்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏனெனில் அது ஒழுக்கநெறிமுறைகள் மற்றும் அதன் கோட்பாடுகளுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று பேஸ்புக் போன்ற சமூக ஊடக அமைப்புகளால் இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தொழில்நுட்ப அமைச்சின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தமது நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தால், நாட்டில் சமூக ஊடகப்பாவனையை முற்றாக நிறுத்த முடியும் எனவும், சம்பந்தப்பட்ட சமூக ஊடக அமைப்புகள் மூலம் தொழில்நுட்ப அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் சமூக ஊடகங்களின் பாவனை தொடர்பில் மெற்டா போன்ற நிறுவனங்கள் தொழில்நுட்ப அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளன என்று தொழில்நுட்ப அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

பெரமுன இருக்கும் இடத்தில் பதவிக்காக செல்ல முடியாது

ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.5

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார் என்று சமூக ஊடகங்களில் பரப்பப்படும் ஆவணம் போலியானது என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இது தொடர்பில் தெரிவித்தபோது, கட்சியின் பெயர் பதிக்கப்பட்ட ஆவணத்தில் தனது கையொப்பத்துடன் பரப்பப்படும் செய்தி தவறானது என குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உள்ளடக்கிய அரசாங்கத்தில் எந்த பதவியையும் ஏற்க நாங்கள் தயாராக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.



அதேவேளை, இடைக்கால அரசாங்கம் அமைக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் யோசனையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் நிராகரித்துள்ளன.

இடைக்கால அரசாங்கம் என்பது உட்கட்சி அரசியலைத் தவிர வேறில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (எ-இ)

பதவி விலகல்கள் சட்டபூர்வமற்றவை

சர்ச்சையைக் கிளப்புகிறார் சாலிய பீரிஸ்



கொழும்பு, ஏப்.5

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அமைச்சரவைக்கும் என்ன நடக்கின்றது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது. அமைச்சர்கள் தங்கள் பதவிவிலகல் கடிதங்களை ஜனாதிபதியிடமே கையளித்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பதவிவிலகல்கள் சட்டபூர்வமானவை அல்ல.

இவ்வாறு சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவை தவிர்ந்த, அமைச்சரவையிலுள்ள அனைத்து அமைச்சர்களும் பதவிவிலகத் தீர்மானித்துள்ளனர் என்றும், அவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளித்துள்ளனர் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் இரவு தெரிவித்திருந்தார்.

அது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே சாலிய பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைச்சர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்கும்போதே அவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகி விட்டனர் எனக் கருதப்படும்.

அமைச்சர்கள் பிரதமரிடம் தங்கள் பதவி விலகல் கடிதங்களைக் கையளித்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் பதவிவிலகல்கள் சட்டபூர்வ தன்மையைக் கொண்டவையல்ல.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் என்ன நடக்கின்றது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய கடப்பாடு உள்ளது. எங்கள் நாட்டாலும், பொருளாதாரத்தாலும் இந்த நிச்சயமற்ற நிலையை தாங்க முடியாது என நான் கருதுகின்றேன்- என்றார். (எ-இ)



அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களியுங்கள்!

அரசின் பங்காளிக் கட்சிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப்.5

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களிக்க அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் முன்வரவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க,


அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்பதற்கு, ஆளும்கட்சியில் இருந்து புரட்சி செய்யும் 11 கட்சிகளும் முன்வரவேண்டும் என்று தெரிவித்தார்.

அதேநேரம் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் விடுத்துள்ள நிலையில், அந்தச் சட்டத்தை நீடிப்பதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். (எ-இ)

இனியும் நாடகங்கள் நடத்தாது ஜனாதிபதி பதவி விலகட்டும்!

வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஏப்.5

அரசியல் கட்சிகளின் வழிநடத்தல் இன்றி வீதியில் இறங்கிப் போராடும் மக்கள் ஜனாதிபதி பதவி விலகி வீட்டுக்கு செல்ல வேண்டும் என்றே கோருகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைச்சரவையை மாற்றியமைப்பதன் மூலமோ அனைத்துக் கட்சிகள் இணைந்த கூட்டு அரசாங்கம் என்ற நாடகம் மூலமோ நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியாது.

இடைக்கால அரசாங்கமோ அல்லது வேறு அரசியல் நாடகங்களோ தொடர்ந்தும் செல்லுபடியாகாது என்பதால், மக்களின் கோரிக்கைக்குத் தலைவணங்கி, ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன். மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வீதியில் இறங்க முடியாத நபர் தொடர்ந்தும் நாட்டின் தலைவராகச் செயற்படத் தகுதியில்லை. - என்றார். (எ-இ)

கோத்தாவை கைகழுவும் ஆளும் கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, ஏப்.5

மக்களின் கோரிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரிக்குமாயின், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஆளும் தரப்பின் பங்காளிக் கட்சிகளினது, 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படவுள்ளனர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்காவிட்டால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



புதினம் தெரியுமோ?

முந்தநாள் மஹிந்த பதவி விலகிட்டார் எண்டு முதலொரு செய்தி வந்து. பிறகு அது பொய் எண்டு பிரதமரின்ர ஊடகப்பிரிவு அறிக்கை விட்டதெல்லோ. ஆனால் பதவியில இருந்து விலகிற கடிதத்தை மஹிந்த எழுதினது உண்மைதான். அதைக் கோத்தாவிட்ட குடுத்ததும் உண்மை. ஆனால் இதை அறிஞ்ச அமைச்சர்மார்தான் உடனடியாக் கூட்டத்தைக் கூட்டி, 'நீங்கள் ஏன் பதவி விலக வேணும்? உங்களைப் பதவி விலகச் சொல்லி சனம் கேக்கேலையே. நீங்கள் பதவி விலகினால், அரசமைப்பின்படி, அமைச்சரவையைக் கலைச்சாச்சு எண்டு அர்த்தம். எல்லாத்துக்கும் காரணம் அஜித் நிவாட் கப்ரால் தான். அவர்தான் நாணய நிதியத்திட்ட போகவேண்டாம் எண்டு மறிச்சவர். பொருளாதாரத்தை இப்பிடிக் கேவலமாக்கினது அவர்தான். அவர்தான் பதவி விலக வேணும்' எண்டு ஒரே சத்தம். இத்தனைக்கும் அந்தக் கூட்டத்துக்கு அஜித் நிவாட் கப்ராலும் வந்திருந்தவராம். ஆளுக்கு முன்னாலையே இப்பிடிக் கடும் பேச்சாம். அந்தச் சமயத்தில தான் எரிபொருள், விவசாயம் சம்பந்தமாகவும் கதை போக, 'நான் ஒழுங்காச் செய்ததை பஸில் வந்து குழப்பிட்டார்' எண்டு மஹிந்தானந்த அளுத்கமகே குறை சொல்லியிருக்கிறார். உடனேயே சீறிப் பாய்ஞ்ச பஸில், 'நீர் செய்த லட்சணம் எல்லாருக்கும் தெரியும். பொத்திக் கொண்டிரும்' எண்டு கண்டபடி பேசிட்டார். ஆனாலும் மஹிந்தானந்தவும் விடேலை. திருப்பி சூடாப் பதிலடி குடுக்க, பெரும் சண்டையாம்.

ஒருமாதிரி எல்லாச் சண்டையும் முடிய, 'வேணும் எண்டால் நாங்கள் ரிசைன் லெட்டரைத் தாறம். அதை வைச்சுக் கொண்டு உங்கட ராஜினாமாவை வாபஸ் வாங்குங்கோ எண்டு அமைச்சர்மார் சொன்ன பிறகுதான் மஹிந்த தன்ர முடிவை மாத்தினவராம்.

ஆனால் பஸில் மட்டும் தன்ர அமைச்சுப் பதவியை விட்டு விலகிற கடிதத்தைக் குடுக்கேலை.

நாங்கள் ரிசைன் பண்ணினால் உந்த ஆர்ப்பாட்டங்களுக்கு பயந்திட்டம் எண்டு நினைப்பினம். அதால பிறகு யோசிச்சு செய்வம் எண்டு சொல்லியிருக்கிறார். ஆனால் அதை மஹிந்த ஏற்கேலை.

சனம் மீரிஹானவில செய்த வேலை தெரியும் தானே. அப்பிடி இனியும் நடந்தால் அது எங்கட அரசியலுக்கு நல்லதில்லை. அதால இப்ப விலகிறதுதான் எதிர்காலத்தில உதவும்' எண்டிருக்கிறார்.

அதுக்கிடையில நாமல், தான் பதவி விலகிட்டன் எண்டு கடிதத்தைக் குடுத்த கையோட, மீடியாக்களுக்கு அறிவிச்சிட்டார். அதாலதான் சும்மா ஒப்புக்கு வாங்கின பதவி விலகல் கடிதங்களை வைச்சுக் கொண்டு, அமைச்சரவை முழுப்பேரும் பதவியில இருந்து விலகிட்டினம் எண்டு அரசாங்கம் அறிவிக்க வேண்டி வந்ததாம்.




- பட்சி



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நாடுமுழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. கொழும்பு, கொட்டாவ மத்தெகொட பிரதேசத்தில் வீதியின் நடுவே தனியே அமர்ந்திருந்து வயோதிபர் ஒருவர் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார். (எ)



புளத்சிங்களவில் அரசாங்கத்துக்கு எதிராகக் களமிறங்கிய தந்தையும், பிள்ளைகளும்....





பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின்போது....



பத்திரமுல்லவில் பதாகையைக் கழற்றி எடுத்து நாமலின் படத்துக்கு அடித்த மக்கள்...



மகப்பேறு முடிந்து, மருத்துவமனையில் இருந்து சிசுவுடன் நேராகப் போராட்டத்தில்...





මොරட்டுவ



கொட்டும் மழையிலும் தளராத ஊவா வெஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்....





யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.












ஆர்ப்பாட்டத்தின் நடுவே தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம் இளைஞர்கள்.





போராட்டத்தால் ஏற்பட்ட குப்பைகளை சுத்தம் செய்த மக்கள்.



அமெரிக்காவில் நியூயோர்க் நகரத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில்...

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இன்னும் திருந்தவில்லை

ராஜபக்சக்கள் பதவிகளை விட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று இலங்கை முழுவதும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்ற நிலைமையிலும், ராஜபக்ச குடும்பம் தங்கள் தகிடுதத்தங்களை நிறுத்துவதாகத் தெரியவில்லை.

நாட்டில் இப்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்களின் முன்யோசனையற்ற - கொள்கையற்ற- ஆட்சிமுறையே காரணம் என்பது வெள்ளிடைமலை. அதனாலேயே ராஜபக்சக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைவிட்டுச் செல்ல வேண்டும் என்று நாட்டு மக்கள் விரும்புகின்றார்கள். அதை வலியுறுத்தியே பெரும் போராட்டங்களை தன்னெழுச்சியாக மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் கோத்தாபய ராஜபக்ச அதிகாரங்களைக் கைவிட்டுச் செல்வதற்குத் தயாராக இல்லை. நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை,நான் பதவியில் இருக்க வேண்டும் என்றவாறே அவரது செயற்பாடுகள் இருந்தன , இருக்கின்றன. இப்போது மேற்கொள்ளப்படும் அமைச்சரவை மாற்றமும் அவற்றில் ஒன்றே. அரசாங்கத்தை மாற்றி நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றோம் என்று காட்டிக் கொள்வதற்காக, ஒன்றுக்கும் பயனில்லாத ஒரு முன்னெடுப்பை எடுத்திருக்கிறார்கள் ராஜபக்ச சகோதரர்கள்.

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படுவதால் நாட்டில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமா என்றால் எதுவுமே இல்லை என்பதே பதில். ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டும் ஏதேனும் நடந்துவிடுமா என்ற கேள்வியும் சரியானதே. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சி அமையுமானால் ஏதேனும் ஒருவகையிலாவது , நாட்டை மீட்பதற்கான முயற்சியை முன்னகர்த்த சந்தர்ப்பம் கிடைக்கக் கூடும் என்பதே இதற்கான பதில்.

இத்தனை காலமும் ஆட்சியை விட்டிறங்க பின்னடித்துக் கொண்டிருந்த ராஜபக்ச சகோதரர்கள் தற்போது இடைக்கால அரசாங்கம் என்ற நிலைக்கு இறங்கி வந்திருப்பது, அவர்கள் சற்றும் எதிர்பாராத மக்கள் எழுச்சியாலேயே. தங்கள் மீதுள்ள மக்கள் கோபத்தை குறைக்க - தங்கள் வாரிசுகளின் அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைக்க- அவர்கள் எடுத்துள்ள இறுதி முயற்சியே இந்த இடைக்கால அரசாங்கம் என்ற நகர்வு.


இடைக்கால அரசாங்கம் என்பது பித்தலாட்டம் என்பதை நேற்று நடந்த புதிய அமைச்சர்கள் நியமனம் புட்டுக் காட்டுகின்றது. நேற்றுமுன்தினம் அமைச்சுப் பதவிகளை விட்டு விலகியவர்கள், நேற்று மீண்டும் புதிதாக அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளனர். அரசாங்கத்தின் பங்காளியாகச் செயற்பட்ட உதய கம்மன்பிலவே அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையில் புதிய போத்தலில் பழைய மது என்று விமர்சித்திருக்கின்றார்.

மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்து நாட்டின் இயல்பு நிலைமை ஸ்தம்பிதம் அடையும் நிலை தோன்றியுள்ள இப்போதும் ராஜபக்சக்கள் தமது குடும்ப நலனையும், அரசியல் எதிர்காலத்தையும் கருத்தில்வைத்துச் செயற்படுகிறார்கள். ராஜபக்சக்களின் இந்தக் கபட நோக்கத்தாலேயே அவர்களுடன் இணைந்து இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகள் பின்னடிக்கின்றன.

மக்களின் விருப்பத்துக்கு, வலியுறுத்தலுக்கு இணங்கி ராஜபக்ச அன்ட் கோ வீடு செல்வதே நாட்டின் எதிர்காலத்துக்குச் சிறந்தது. உலகெங்கும் நடந்த மக்கள் எழுச்சிகளின் முடிவுகளை ராஜபக்சக்கள் அறிந்து கொள்வது நல்லது. தகிடுதத்தங்கள் செய்து மக்களை ஏமாற்றி அதிகாரங்களைத் தம்வசம் வைத்திருக்கலாம் என்று ராஜபக்சக்கள் நினைப்பார்களாயின் எதிர்வரும் நாள்கள் அவர்களுக்கு இலகுவாக இருக்காது என்பதே உண்மை. மக்களின் பொறுமை எல்லை கடக்கும்போது, அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள்.

நாளொரு நல்வார்த்தை

"நீங்களும் நன்றாக வாழுங்கள். மற்றவர்களையும் நன்கு வாழ விடுங்கள்" – ஸ்சில்லர்



கோத்தாபய அரசாங்கத்தை வேருடன் பிடுங்கி வீசுவோம்

சஜித் ஆவேசம்



கொழும்பு, ஏப். 5

"ராஜபக்ச அரசு, நாட்டுக்கு ஒரு கெடுவினையாகும், காட்டு மிராண்டித்தனமான இந்த அரசை மக்களின் ஆணையுடன் வேரோடு பிடுங்கி வீசவேண்டும்" - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகச் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களின் பங்கேற்புடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கிய இந்த அரசை ஒருகணமேனும் ஆட்சியில்தக்கவைக்க இந்த நாட்டு மக்கள் தயாராக இல்லை. இந்த அரசு ஜனநாயக ரீதியாக மக்கள் ஆதரவின் பெயரால் தூக்கியெறியப்படும். நாம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும்முகமாக உறுதியாக முன் நிற்கின்றோம். இந்த அரசு நாட்டு மக்களை மயானத்தின் பக்கம் தள்ளிக்கொண்டிருக்கின்றது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான அரசை முற்றிலுமாக வீழ்த்தி தூக்கி எறிய வேண்டும்" - என்றார். (ம-22)

ஜனாதிபதியும் அமைச்சரவையும் பதவி விலகுவதுதான் ஒரே தீர்வு!

இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

ஜனாதிபதியும் அமைச்சரவையும் பதவி விலகுவதே ஒரேதீர்வு என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் போர் இல்லை, பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை. கொரோனா இல்லை. ஆனால் இன்று ஒரு குடும்பத்தை பாதுகாக்க ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் பிரதமரும் தத்தமது குடும்பங்களைப் பாதுகாக்க நாட்டு மக்கள் அனைவரையும் வீட்டுக்குள் அடைத்து வைத்துள்ளனர். அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக நாட்டு மக்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். தேசிய அரசாங்கமோ அமைச்சரவை மாற்றமோ இதற்கு தீர்வல்ல. ஜனாதிபதியும் அமைச்சரவையும் பதவி விலகுவதே ஒரே தீர்வு. மக்களின் தீர்ப்பின்படி புதிய ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் தெரிவு செய்யப்பட்ட வேண்டும் - என்றார். (ம)

நாளை 06.04.2022 புதன்கிழமை பங்குனி 23

சுபநேரம் : 04.38 - 06.08
ராகுகாலம்: 12.08 - 01.38

யாழ். அத்தியடிப் பிள்ளையார் கொடி



சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

இந்த முறையை, மாற்ற வேண்டிய காலமிது!

தாம் மண்ணையும் உறவுகளையும் விட்டு, தூர தேசம் சென்று உழைப்போரின் ஒவ்வொரு டொலருக்கும் அதியுயர் பெறுமதி இப்போது சம்பத் e-remittance ஊடாக.
வெளிநாட்டிலிருந்து சட்டரீதியாக அவர்கள் அனுப்பும் பணத்தை, விரைவாகவும், பாதுகாப்பாகவும் உங்களுக்குப் பெற்றுத் தர நாடெங்கும் வியாபித்திருக்கும் சம்பத் வங்கிக் கிளைகள் மற்றும் 24 மணிநேரமும் இயங்கும் ATM வலையமைப்புகள் உங்களுக்காகவே செயற்படுகின்றன.



மாறியிருக்கும் மற்றும் மாற்றத்தை விரும்பும் உங்களுக்காகவே
இப் புதுவருட காலத்தில் பரிசுகள் ஏராளம்!

மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 31ஆம் திகதி வரை சம்பத் e-remittance ஊடாக, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் உங்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்.

மேலதிக விபரங்கள் அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையில்.

பணம் அனுப்புவதற்கான சிறந்த வழி – சம்பத் e-remittance.

Sampath remittance service
රෙමිටන්ස් සේවාව ரெமிட்டன்ஸ் சேவை

அக்கரையின் அன்பு உடனே இக்கரைக்கு

*நிபந்தனைகளுக்குட்பட்டது
0112 30 30 50 www.sampath.lk

பேராசிரியர் சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் மறைவு!

கொழும்பு, ஏப். 5

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தின் சமூகவிஞ்ஞான கல்வியியல் துறையின் ஓய்வு நிலை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தனது 78ஆவது வயதில் நேற்றுமுன்தினம் மாலை காலமானார்.



1944ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிறந்த பேராசிரியர் சந்திரசேகரம், இலங்கையின் தமிழ் கல்வி வரலாற்றில் பெரும் பங்களிப்புக்களை செய்தவராவார். புதுளையை பிறப்பிடமாகக்கொண்ட பேராசிரியர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்.

கல்வியியல் துறையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோசிமா பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரியாவார். கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் பீடாதிபதியாகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராகவும் மற்றும் கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் அவர் பணியாற்றினார். தனது கல்வியியல் துறை விரிவுரையாளர் பணியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தார்.

தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் புலமை கொண்டவர் என்பதுடன் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். பேராசிரியர் மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்மொழிந்தவர்களுள் முக்கிய மானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தொடர் 14ஆவது சொற்பொழிவு நிகழ்வு மல்லாகம் சாளம்பையான் அற நெறிப் பாடசாலையில், எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை' என்னும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுரனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். (ய)

காவியநாயகன்

திருப்பாடுகளின் நாடகம் வியாழன்று அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 5

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் நாளைமறுதினம் 7ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் இந்த ஆற்றுகை ஆரம்பமாகவுள்ளது. ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் இவ்வாற்றுகை கொரோனாப் பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மேடையேற்றப்படவில்லை என்பதுடன் கடந்த ஆண்டுகள் 'களங்கம்' என்னும் பெயரில் சிறிய அளவில் மேடையேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

'அன்பின் காவியம்' இன்று அரங்கேற்றம்

மன்னார், ஏப். 5

மன்னார் மறைமாவட்ட சமூக அருட்பணி மையத்தின் கலையருவி கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில், 'அன்பின் காவியம்' திருப்பாடுகளின் காட்சி இன்று அரங்கேற்றப்படுகின்றது.

நேற்று ஆற்றுப்படுத்தத் திட்டமிட்ட குறித்த காட்சி, ஊரடங்குச் சட்டம் காரணமாகப் பிற்போடப்பட்ட நிலையில் இன்று ஆற்றுகைக்கு வருகின்றது. இதன்படி இன்றும் நாளையும் இந்த ஆற்றுகை இடம்பெறும். (ம)

மருமகன் தாக்கி மாமன் காயம்

சாவகச்சேரி, ஏப்.5

மட்டுவில் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மருமகன் தாக்கியதில் மாமன் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஏப். 5

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், ஆனைக்கோட்டை கண்ணகிபுரம் இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் கீர்த்தனைக் கிரியா பூஷணம் சிவஸ்ரீ கு.கிஸ்ணராஜக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-14)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நடராஜா சிவகாமிப்பிள்ளை (பருத்துறை மாமி)



அன்னை மடியில்
20
.
09
.
1931

ஆண்டவன் நிழலில்
03
.
04
.
2021

திதி: (07.04.2022)

“ஓராண்டு ஆனால் என்ன
ஓராயிரம் ஆண்டுகள்
ஆனால் என்ன

உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் உள்ளங்களில்
நிறைந்திருக்கும்

வலிகளை சுமந்து தனிமையில்
அழுகின்றோம்
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து
நிற்கின்றோம்

மாறாத துயரினைத் தந்து
மீளாத்துயில் கொண்ட
எம் அன்பு தெய்வமே!
உருவாய் இல்லை என்றாலும்

தெய்வமாய் எங்களுடனே
என்றும் வாழ்ந்து கொண்டே
இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கும்

**பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
சிறிநிக்கா, சிறிநிஷான்.**

(cs-18561) (2.6)

இந்த புது வருட காலத்தில் அதிகப்படியான விலைக் கழிவுகள்

60% வரையான கழிவுகள்

People's கடன் அட்டையில் 60% வரையான நம்ப முடியாத கழிவுகளை அனுபவித்திடுங்கள்



Leisure

Up to 60%
- Tea Plant Nuwara Eliya — Credit : 60% Till 31st March — 0772020212 / 0772304477
- Amaara Sky Hotel Kandy — Credit : Up to 60% Debit : Up to 60% Till 30th April — 0774778315 / 0812239888
- Amaara Forest Hotel Sigiriya — Credit : Up to 60% Debit : Up to 60% Till 30th April — 0770038311 / 0662277277

Up to 55%
- Arie Lagoon Negombo — Credit : Up to 55% Debit : Up to 55% Till 30th April — 0317745745 / 0114327818

Up to 50%
- Aarya Lagoon Kalpitiya — Credit : Up to 50% Till 30th April — 0777509000

- Apa Villa Thalpe — Credit : Up to 50% Debit : Up to 50% Till 30th April — 0779594545 / 0113663699
- Era Beach Thalpe — Credit : Up to 50% Debit : Up to 50% Till 30th April — 0779594545 / 0113663699
- Joe's Resort Unawatuna — Credit : Up to 50% Debit : Up to 50% Till 30th April — 0779594545 / 0113663699
- Turyaa Kalutara — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Negombo — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Tea Factory (Kandapola) — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Kandalama — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Ahungalla — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Amethyst Resort Passikudah — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Earl's Regency (Kandy) — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Earl's Regent Kandy — Credit : Up to 50% 15th March to 15th April (Online Booking Only)
- Sooriya Resort & Spa (Tangalle) — Credit : 50% Till 31st March — 0769484434 / 0763484431 / 0763484439
- Hikkaduwa Beach Hotel (Hikkaduwa) — Credit : 50% Till 30th April — 0770136481
- Melheim Beach Kalpitiya — Credit : 50% Debit : 50% Till 30th April — 0702354466
- Melheim Resort Haputale — Credit : 50% Debit : 50% Till 30th April — 0702354466
- Melheim Kandy — Credit : 50% Debit : 50% Till 30th April — 0702354466
- Range Kandy — Credit : 50% Debit : 50% Till 30th June — 0770258258
- Sky Pavilion (Kandy) — Credit : 50% Debit : 50% Till 30th June — 0770258258
- Randholee Resorts (Kandy) — Credit : 50% Debit : 50% Till 30th June — 0812217741 / 0812217742 / 0812217743
- Royal Hills Nuwara Eliya — Credit : Up to 50% Debit : Up to 50% Till 30th April — 0771106327 / 0522224219
- Uga Bay (Passikudah) — Credit : 50% 21st to 23rd March — 0115671000
- Uga Jungle Beach (Trincomalee) — Credit : 50% 21st to 23rd March — 0115671000
- Ahaspokuna Bush Walks Camp Belihuloya by Eco Team (Belihuloya) — Credit : 50% Till 30th April — 0710662202
- Big Game Camps & Lodges by Eco Team (Yala/Udawalawe/Wilpattu) — Credit : 50% Till 30th April — 0710662202
- Mahoora Tented Safari Camps by Eco Team (Yala/Udawalawe/Wilpattu) — Credit : 50% Till 30th April — 0710662202
- Seeroch The King's Domain (Sigiriya) — Credit : 50% Till 30th April — 0664545242 / 0768274726
- The Glenrock Upstream Belihuloya — Credit : 50% Till 31st March — 0769205305
- Occidental Paradise Dambulla — Credit : 50% Debit : 50% 15th March to 31st May (Online Booking - Promo Code-PEB22) — 0662286300

45%
- The Long Beach Resort & Spa (Koggala) — Credit : 45% Debit : 45% Till 30th April — 0711543236 / 0711555805 / 0912282830
- Koggala Beach Hotel (Koggala) — Credit : 45% Debit : 45% Till 30th April — 0711543236 / 0711555805 / 0912282830
- Ranweli Holiday Village (Walkhai) — Credit : 45% Debit : 45% Till 30th April — 0711096739 / 0312276390

Up to 40%
- Kingdom Secret (Kiriella) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0719474536 / 0653649999
- Giman Free (Passikudah) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0719474536 / 0653649999
- Elephas Resort Sigiriya — Credit : 40% Till 31st March — 0763157330 / 0662054111 / 0662054112
- Malu Malu Resorts & Spas Passikudah — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- The Other Corner Habarana — Credit : 40% Debit : 40% Till 31st May — 0773327995 / 0117399500
- Tea & Experience Factory Mandaramnuwara — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Amagi Beach (Marawila) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0703569175
- Galway Heights Nuwara Eliya — Credit : Up to 40% Debit : 30% Till 31st March — 0522030400 / 0760978884
- The Rain Tree (Thissamaharama) — Credit : 40% Debit : 40% Till 31st May — 0715597641 / 0472238125
- Sigiriya Kingdom Gate (Dambulla) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0774729000
- Aliya Resort & Spa Sigiriya — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Sungreen Resort & Spa Habarana — Credit : 40% Till 30th June — 0768055050 /0667634000
- Scottish Planter Glendevon Bungalow (Nuwara Eliya) — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Amagi Aria (Negombo) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0703569175
- Parangi Weligama Bay (Weligama) — Credit : 40% 16th & 17th March — 0774038168 / 0772930643
- Wild Glamping Gal Oya — Credit : 40% 16th & 17th March — 0774038168 / 0772930643
- Wild Glamping Knuckles — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Mountbatten Bungalow Kandy — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Kithala Resort Thissamaharama — Credit : 40% 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)

Up to 35%
- Sigiriya Jungles (Sigiriya) — Credit : 40% Debit : 40% Till 30th April — 0664508508 / 0114508508
- EKHO Surf Bentota — Credit : 35% Till 31st March — 0115585858 / 0772387777
- EKHO Sigiriya — Credit : 35% Till 31st March — 0115585858 / 0772387777
- EKHO Ella — Credit : 35% Till 31st March — 0115585858 / 0772387777
- EKHO Safari Tissa (Tissamaharama) — Credit : 35% Till 31st March — 0115585858 / 0772387777
- EKHO Lake House Polonnaruwa — Credit : 35% Till 31st March — 0115585858 / 0772387777
- Rajarata Hotel (Anuradhapura) — Credit : 35% Till 31st March — 0770029168
- Tropical Life Resort & Spa Dambulla — Credit : 35% Debit : 35% Till 30th April — 0662030300 / 0777225151
- Senwya Resorts Belihuloya — Credit : 35% Debit : 35% Till 30th April — 0773138844
- Orient Hotel Bandaraweela — Credit : 35% Till 10th April — 0777825473 / 0776475694 / 0112422441 / 0572222407
- Stay at Ahangama — Credit : Up to 35% Debit : Up to 35% Till 30th April — 0777353130
- Handun villas (Tolalla) — Credit : 35% Debit : 35% Till 31st March — 0414933016
- Insight Resort (Ahangama) — Credit : 35% Debit : 35% Till 30th April — 0912283296 / 0912283568 / 0912283569 / 0768900717

Up to 30%
- Yulu 77 Resorts Anuradhapura — Credit : 30% Debit : 30% Till 30th November — 0764432442
- Heavens Gate Resort Kandy — Credit : 30% Debit : 30% Till 30th November — 0764432442
- Glory Bush Boutique Villa Nuwara Elliya — Credit : 30% Debit : 30% Till 30th November — 0764432442
- Anilana Hotels & Resorts Passikudah — Credit : 30% Till 31st May — 0112030900 / 0773209041
- Cottage 42 Nuwara Eliya — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- Birds Park (Polgahawela) — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- Dream Lodge (Hanthana) — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- Gedara Villa Kalutara — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- South Lake Resorts (Koggala) — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- Sathmin Villa (Ahangama) — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236
- Lavendish Wild Safari (Wasgamuwa) — Credit : Up to 30% Till 14th July (Blackout Period 11th to 20th April) — 0753941941
- Lavendish Miridiya Lake Resort (Anuradhapura) — Credit : Up to 30% Till 14th July (Blackout Period 11th to 20th April) — 0252222112
- Lavendish Country Resort (Dambulla) — Credit : Up to 30% Till 14th July (Blackout Period 11th to 20th April) — 0753555946
- Lavendish Grand Tamarind Lake (Yala) — Credit : Up to 30% Till 14th July (Blackout Period 11th to 20th April) — 0753556039
- Lavendish Otrin Hotel (Kataragama) — Credit : Up to 30% Till 14th July (Blackout Period 11th to 20th April) — 0753556044
- Villa Indrasiriya Ahangama — Credit : 30% Debit : 30% Till 30th April — 0914944500 / 0766857236

Up to 25%
- Hotel Alakamanda (Anuradhapura) — Credit : Up to 25% Till 30th April — 0255620277 / 0777790511
- Grand Royal Pinnalanda (Rambukkana) — Credit : 25% Debit : 25% Till 30th April — 0352265297

20%
- Hotel Elephant Bay (Rambukkana) — Credit : 20% Till 31st December — 0777432025 / 0352266731 / 0352262352
- 88th Ella — Credit : 20% Debit : 20% Till 31st March — 0769904480
- 88th Hanthana — Credit : 20% Debit : 20% Till 31st March — 0769904480

Up to 15%
- Thisew Nillambe (Kandy) — Credit : Up to 15% Debit : Up to 15% Till 31st March — 0771207330

Up to 10%
- Sigiriya King's Resort (Sigiriya) — Credit : 10% Debit : 10% 15th March to 15th July — 0771366167
- Palmstone Retreat (Kithulgala) — Credit : 10% Till 31st March — 0767993199
- Wildescape Buttala — Credit & Debit : Up to 10% Savings for reservation of entire bungalow for 2 or more nights Till 30th April — 0114508508
- Lady Hill Galle — Credit : 10% Till 30th April — 0763609843
- Redwood Falcon Cabins (Nuwara Eliya) — Credit : 10% Till 31st March — 0723339740
- Redwood Hollow Cabins (Nuwara Eliya) — Credit : 10% Till 31st March — 0723339740
- Leaf Olu Ella (Yatiyanthota) — Credit : 10% Till 31st December — 0772926716 / 0776289051
- Leaf Watagala (Ruwanwella) — Credit : 10% Till 31st December — 0772926716 / 0776289051
- Stratford Cottage (Nuwara Eliya) — Credit : 10% Till 31st December — 0772926716 / 0776289051
- Wild Grass Nature Resort (Sigiriya) — Credit - DBL FB - Rates start at LKR 14,000/- per person per night sharing double on weekdays and LKR 15,000/- per person per night on weekends double sharing. Till 31st March — 0771788487 / 0664935577 / 0662286866
- The Calm Resort & Spa Pasiluda — Credit - LKR 8,000/- nett per person on FB Basis Till 31st March — 0652050370 / 0114626626
- Temple Tree Resort & Spa (Bentota) — Credit & Debit SGL FB – 14,500/-, SGL HB – 13,500/- DBL FB – 17,250/-, DBL HB – 15,000/- TPL FB – 20,250/-, TPL HB – 17,500/- Till 30th April — 0716267843 / 0342270700

Clothing

Up to 40%
- Beverly Street — Credit : Up to 40% Debit : Up to 30% 26th & 27th March (On Selected Items)

Up to 35%
- Hugo Boss — Credit : Up to 35% 15th March to 15th April (On Selected Items)
- Under Armour — Credit : Up to 35% 15th March to 15th April (On Selected Items)

30%
- Kelly Felder — Credit : 30% Debit : 20% 18th & 19th March
- The Factory Hub — Credit : 30% Debit : 15% 26th, 27th & 28th March
- Amante — Credit : 30% Debit : 10% 27th & 28th March
- The Brands Warehouse — Credit : 30% Debit : 15% 24th, 25th & 26th March

25%
- Cotton & Thread — Credit : 30% Debit : 20% 18th, 19th & 20th March
- Aditi Infinity — Credit : 30% Debit : 15% 4th & 5th April
- Sunimal's — Credit : 30% Debit : 15% 9th & 10th April
- Spring & Summer — Credit : 25% Debit : 10% 26th & 27th March
- Nils Store — Credit : 25% 7th & 8th April
- Dilly & Carlo — Credit : 25% Debit : 10% 27th & 28th March
- Hi Life — Credit : 25% Debit : 10% 4th, 5th & 6th April
- Chamathkara — Credit : 25% Debit : 25% 15th March to 30th April
- Iris — Credit : 25% 7th & 8th April
- Fashion Enuli — Credit : 25% Debit : 10% 24th & 25th March
- Queen Nithijaya — Credit : 25% Debit : 25% 15th to 18th March
- Molly Boulevard — Credit : 25% Debit : 10% 28th, 29th & 30th March
- The Factory Outlet — Credit : 25% Debit : 10% 19th, 20th March & 16th, 17th April
- Arisia — Credit : 25% Debit : 10% 8th & 9th April
- Double XL — Credit : 25% Debit : 15% 31st March & 1st April
- Velona — Credit : 25% Debit : 10% 8th & 9th April
- Chenara Dodge — Credit : 25% Debit : 15% 3rd & 4th April
- Saree Mandir — Credit : 25% Debit : 15% 1st, 2nd & 3rd April
- Nithijaya Saree Fashion — Credit : 25% Debit : 25% 15th to 18th March
- Sarathchandra Textiles — Credit : 25% Debit : 10% 2nd & 3rd April
- Saman Mal — Credit : 25% Debit : 15% 27th March & 3rd, 7th April (Min. bill value Rs. 5,000/-)
- Kreation — Credit : 25% Debit : 15% 17th to 20th March
- Diliganz — Credit : 25% 7th & 8th April
- Shopimo — Credit : 25% Debit : 10% 19th & 20th March
- Jump Clothing — Credit : 25% Debit : 10% 30th March to 1st April
- The Kids Warehouse — Credit : 25% Debit : 15% 31st March to 1st April
- House of Fashions — Credit : 25% 20th, 27th March & 7th, 10th April
- Nora Reed — Credit : 25% Debit : 10% 10th, 11th & 12th April
- E Friends — Credit : 25% 30th & 31st March
- Emerald — Credit : 25% 1st, 2nd & 3rd April (Only for Battaramulla Outlet)
- Adidas Exclusive — Credit : 25% 24th & 25th March (Racecourse Mall, KCC & Pelawatte)
- Envoy Mansion — Credit : 25% 24th & 25th March
- Hameedia — Credit : 25% 24th & 25th March
- Envoy London — Credit : 25% 24th & 25th March
- Signature — Credit : 25% 24th & 25th March

20%
- Haamaa — Credit : 20% Debit : 10% 1st & 2nd April
- CIB Shopping Centre — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Claire's Closet — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- CIB Curtains — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Cool Planet — Credit : 20% Debit : 10% 15th & 16th March
- Wijaya Saree Mandir — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Nirmani Dress Point — Credit : 20% Debit : 10% 26th & 27th March
- New Manel — Credit : 20% Debit : 10% 1st & 2nd April
- Wijaya House of Tailors — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Fashion Bug — Credit : 20% 4th & 5th April
- Piyarathna Tex — Credit : 20% Debit : 10% 28th & 29th March
- Prasad Fashion Square — Credit : 20% Debit : 10% 18th & 19th March
- Arienti — Credit : 20% 27th March
- GCS Fashions (Polonnaruwa) — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Supul Collection — Credit : 20% 19th & 20th March
- Little Things — Credit : 20% 9th & 10th April
- Gayan Inlooh — Credit : 20% 2nd & 3rd April
- Thilakma Fashion — Credit : 20% 7th & 8th April
- Uptown Kandy — Credit : 20% 26th & 27th March
- Nolimit — Credit : 20% 29th & 30th March (On Selected Items)
- Glitz — Credit : 20% 29th & 30th March (On Selected Items)
- Mimosa — Credit : 20% Debit : 10% 5th, 6th & 7th April
- Nick Nach — Credit : 20% Debit : 10% 15th & 16th March
- Inter Fashion — Credit : 20% Debit : 10% 27th March & 2nd April
- The Vanta Studios — Credit : 20% Debit : 10% 5th, 6th & 7th April
- ASB Fashion — Credit : 20% Debit : 7.5% 30th & 31st March
- Handloom Gallery — Credit : 20% Debit : 10% 26th, 27th March & 6th, 7th April
- Sriyani Dress Point — Credit : 20% 2nd & 3rd April
- Will by Zac — Credit : 20% 9th & 10th April
- Zuzi — Credit : 20% Debit : 10% 29th & 30th March
- MAGS — Credit : 20% 2nd & 3rd April
- Exibit — Credit : 20% Debit : 10% 15th & 16th March
- I.O.A.K — Credit : 20% 8th to 12th April
- Level Outfitters — Credit : 20% Debit : 15% 11th & 12th April
- Classy Collection — Credit : 20% Debit : 10% 4th & 6th April
- Rich Look — Credit : 20% Debit : 10% 26th & 27th March
- Krish Fashion — Credit : 20% 26th & 27th March
- Galle City Stores (Polonnaruwa) — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Sting Clothing — Credit : 20% Debit : 10% (CCC & OGF Mall) 4th & 5th April
- Prasad Textiles — Credit : 20% Debit : 10% 18th & 19th March
- Urban Go — 18th to 20th March
- GMT — Credit : 20% (Excluding Jockey & Speedo) 18th to 20th March
- Urban Trendz — Credit : 20% 18th to 20th March
- United Colors of Benetton — Credit : 20% 18th to 20th March
- Super Fashion (Panadura) — Credit : 20% Debit : 10% 18th & 19th March
- Kadapatha — Credit : 20% 23rd, 24th March & 4th, 5th April
- Cotton Island — Credit : 20% Debit : 10% 20th to 22nd March
- Emma Fashion — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Piyara Fashion — Credit : 20% Debit : 10% 26th & 27th March
- RV Fashion — Credit : 20% Debit : 10% 2nd & 3rd April
- Atukorala Textiles — Credit : 20% Debit : 10% 15th, 16th & 17th March

15%
- Choice Park — Credit : 15% Debit : 10% 26th March
- Kreation — Credit : 15% Debit : 15% 4th to 7th April

10%
- Nils Store — Credit : 10% 16th & 17th March

Supermarkets

Up to 25%
- Cargills — Credit : 25% off on Fresh Vegetables, Fruits & Seafood Till 30th June on Every Tuesday & Thursday (Exclude from 1st to 10th April) Debit : 10% off for Fresh Vegetables, Fruits & Seafood Till 31st March (Every Tuesday & Thursday) Min. Bill Value – Rs. 2,000/- (Cargills Food City Outlets) & Rs. 1,500/- (Cargills Express Outlets) Max. Discount Per Transaction is Rs. 1,000/- Max. quantity of 5kg per item
- Keells — 25% off on fresh vegetables, fruits & seafood Till 30th June (Every Monday & Wednesday) for bills over Rs.3,000/- Max. Discount per bill - Rs.1,000/-

10%
- Softlogic Glomark — 20% off on total bill value Till 30th June (Every Saturday) Min. Total Bill Value to be eligible – Rs. 5,000/- Max. Bill Value – Rs. 10,000/- Max. Discount per transaction – Rs. 2,000/- Max. 3 units /3kg per product
- Laugfs Super — 10% off on total bill value Till 30th June (Every Sunday) Min. Bill Value – Rs. 2,500/- Max. Discount Per Transaction is Rs. 1,000/- Max. quantity of 5 units/5kg per item.
- Arpico — 10% off on total bill value at Arpico Supercentre, Superstore & Arpico Daily Till 30th June (Every Friday) for bills over Rs. 5,000/- Max. Discount Per Bill - Rs. 1,500/-

Shoes & Leather

Up to 35%
- Skechers — Credit : Up to 35% 15th March to 15th April (On Selected Items)

25%
- Bata — Helanka — Credit : 25% Debit : 10% 7th & 8th April; Bata — Credit : 25% 9th to 13th April

20%
- K by Helanka (Kurunegala) — Credit : 20% Debit : 10% 21st & 22nd March

15%
- DSI — Credit : 15% Debit : 10% 11th & 12th April (DSI, DSI Franchise & Factory Outlets)

10%
- Saffans — Credit : 10% 12th & 13th April

Terms & conditions apply

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation

டக்ளஸின்...

களால் யாழ்ப்பாணத்தில் நேற்று இருவேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். பல்கலை முன்பாக மாணவர்கள் ஜனாதிபதியை வெளியேறக்கோரி நேற்றுக் காலை போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டம் பல மாணவர்களின் பங்கெடுப்போடு, பல்கலையில் இருந்து யாழ். நகர் நோக்கி பேரணியாக சென்றது. பல்கலை முன்பாக ஆரம்பமான பேரணி பலாலி வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து, அங்கிருந்து யாழ். மத்திய பேருந்து நிலையத்தை சென்றடைந்தது. பேருந்து நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் மாணவர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து, கஸ்தூரியார் வீதியூடாக, ஸ்ரான்லி வீதியை அடைந்து, அங்கிருந்து ஆரியகுளம் சந்தியை அடைந்து, மீண்டும் பலாலி வீதியூடாக மாணவர்கள் பேரணி பல்கலையை அடைந்தது. மாணவர்கள் பேரணியாக ஸ்ரான்லி வீதியூடாக செல்லும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகமான சிறிதர் தியேட்டர் முன்பு சில நிமிடங்கள் தரித்து நின்று அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். இதேவேளை- உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் யாழ்ப்பாணம் பொதுநூலகத்திலிருந்து பேரணியை ஆரம்பித்து, மத்திய பேருந்து நிலையத்தில் நிறைவுறுத்தினர்.

(ஒ-20)

ஆளும் தரப்பினரின்...

விலகினாலும் அவர்களது வீடுகள் மற்றும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் போராட்டக்காரர்களால் நேற்று முற்றுகையிடப்பட்டன. அத்துடன் முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகேயின் வீட்டின் மீது தீ வைக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர்களான சாமல் ராஜபக்ச, .கெஹலிய ரம்புக்வெல, ஜனக பண்டார தென்னக்கோன், காஞ்சனா விஜயசேகர,றமேஷ் பத்திரண, நிமல் லான்சா, ஷசீந்திர ராஜபக்ச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேய குணவர்தன, ரொஷான் ரணசிங்க ஆகியோரின் வீடுகள் முன்பாக நேற்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின்போது வீடுகளுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதால் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தினர்.

(ஒ-5)

அமெரி.கோத்தாவின்....

சவின் மகன் மனோஜ் ராஜபக்சவின் வீட்டுக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதியின் மகனை அவரது தந்தையை வீட்டுக்கு (அமெரிக்காவுக்கு) அழைத்து வருமாறு கோஷம் எழுப்பியுள்ளனர். (ஒ-இ)

இன்றைய நாள் (ராசிபலன்)

மேடம்: வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றி அமைப்பீர்கள். மதியத்துக்கு மேல் மகிழ்ச்சியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். கண் தொடர்பான பிரச்சினை வந்தாலும் அதிலிருந்து விரைவில் மீளுவீர்கள்.

இடபம்: எப்போதோ எதிர்பார்த்த லாபம் இன்று நிதானமாகக் கிடைக்கும். வரவு-செலவுகளைத் திட்டமிட்டுச் செய்வது நல்லது. வேலைப்பளு காரணமாக ஓய்வின்றி உழைப்பீர்கள்.

மிதுனம்: ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உற்சாகம் கூடும். நண்பர், உறவினர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவக் காத்திருப்பர். எதிர்பாராத சுபச் செலவால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

கடகம்: கோபத்தின் காரணமாக நல்ல நட்பை இழக்கவேண்டாம். புதிய பொறுப்பு ஒன்றைத் திறம்படக் கையாண்டு வெல்வீர்கள். வெளியிடங்களில் நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

சிம்மம்: குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய மனிதர்களிடம் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும். உங்களுடைய நேர்மையான உழைப்பு பலன் தரும்.

கன்னி: மாற்றுக்கருத்து உடையோரைப் புறக்கணியுங்கள். மறதியால் தவறு செய்ய நேரலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடலுக்கு ஒவ்வாத உணவை சாப்பிட வேண்டாம்.

துலாம்: முயற்சிக்கான வெற்றி கிட்டும். துன்பங்கள் விலகி ஓடும். உங்களது முயற்சிக்கான பலன் கிடைப்பதால் உற்சாகம் கூடும். பணியாளர்களுக்குப் புதிய பதவி கிடைக்கலாம். முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: இன்று குடும்பத்தில் மகிழ்ச்சிக்கான செயல் நடைபெறும். நேற்றைய இடையூறு இன்று நீங்குவதால் நிம்மதி கூடும்.சக வியாபாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வர்.

தனுசு: எடுத்த புதுமுயற்சி ஒன்றில் அனுகூலம் உண்டு. கடமையைப் பொறுப்புடன் செய்வீர்கள். சந்தோஷம் கூடும். தள்ளிப்போன திருமண வாய்ப்பு கைகூடுவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

மகரம்: பழைய கவலை தீரும். உறவினரின் உதவி கிடைக்கும். உங்கள் செல்வாக்கு மேலோங்கும். வசீகரம் அதிகரிக்கும். வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கான பலன் உடனே கிடைக்கும்.

கும்பம்: காலையில் குதூகலமும், மாலையில் பொறுப்பும் ஏற்படும். பணியிடத்தில் உங்களுக்கு முக்கியத்துவம் வருவதால் பெருமிதம் அடைவீர்கள். நிதிநிலை கூடுவதால் நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு.

மீனம்: கனிவாகப் பேசி நல்லவர்களின் மனதைக் கவர்வீர்கள். திடமான பேச்சினால் பெரியவர்களிடம் ஆசி பெறுவீர்கள். மனதில் உறுதியும் தன்னம்பிக்கையும் கூடுவதால் சந்தோஷம் அதிகரிக்கும்.

மரண அறிவித்தல்



ஜோசேப் ஜெகதீஸ்வரன்

பிறப்பு 04.08.1981

இறப்பு 01.04.2022

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆசிரியமணி செல்லையா வீதி அளவெட்டி தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசேப் ஜெகதீஸ்வரன் (தமிழவன், காந்தி மாஸ்டர்) (ஆசிரியர்-கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்)அவர்கள் கடந்த (01.04.2022) வெள்ளிக்கிழமை அகாலமானார்.

அன்னார் அமரர்களான ஜோசேப் -அமராவதி தம்பதிகளின் பாசமிகு மகனும், அமரர் பாக்கிநாதன் பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், பகீரதி (கிராம சேவர் J/212 மல்லாகம் தெற்கு) அவர்களின் அன்புக் கணவரும், இராசேந்திரன், ஜெயந்திரன், இராஜேஸ்வரி அமரர் தெய்வேந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், புஸ்பமலர் (அசிரியர்- கிளி/ஊற்றுப் புலம் அ.த.க பாடசாலை), கவிதா ஜெயகுமார், பாரதி (வலி தெற்கு பிரதேச சபை, மருதனார் மடம்), கார்த்திகா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், நாகதீபன் (ஆசிரியர்-யா/புனித ஹென்றியரசர் கல்லூரி), சதீஸ் (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19204) (4/6)

077 288 7537,
077 724 8161,
077 176 4510

தகவல்:
குடும்பத்தினர்

Clerk தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் ரியூசன் சென்ரர் ஒன்றிற்கு Clerk வேலைக்கு தேவை. பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. 077 293 5265

(CS 19198) (4/6)

வேலை ஆட்கள் தேவை

ஆண், பெண் கூலியாட்கள், சாரதிகள் தேவை.

T.P: 077 77 222 15

கிளைப்பொதுச்சபைக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்

வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் (அச்சுவேலி) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பாக 30.03.2022 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு தனிப்பட்ட ரீதியில் அனுப்பட்ட நிகழ்ச்சி நிரல் கடிதங்களுக்கு அமையவும் 03.04.2022ஆம் திகதி கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெற இருந்தது. ஆனால் இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக அன்றைய தினம் நடத்த முடியாமல் போயுள்ளது. எனவே இப் பொது அறிவித்தல் ஊடாக ஏற்கனவே வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய 09.04.2022ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று (காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள்) அன்றைய தினம் நடைபெறவுள்ள கிளைப்பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(CR 8221) (4/6)

05.04.2022

செயலாளர்
வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) அச்சுவேலி

உடன் வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு வேலையாட்கள் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை (தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்)

(CS 0985) (4/6)


T.P - 077 378 8746

பதவி வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள GNANAMS HOTEL இற்கு அனுபவமுள்ள Chef, Housekeeping staff தேவை. தொடர்பு:

(CS 19197)(4/6) 076 222 0632, 074 084 0631

கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி கஜேந்தினி ஞானராசா
அவர்களின் பாசமிகு தந்தை
சின்னையா இராமமூர்த்தி
கடந்த 27.03.2022 கனடாவில்
இறைபதமடைந்தார் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cr.37785) (2.6)

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

மக்கள்...

கள், சினிமா நட்சத்திரங்கள், ஊடகப் பிரபலங்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்துள்ளனர். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான சனத் ஜெயசூரியா, மார்வன் அத்தப்பத்து, ரொஷான் மஹாநாம மற்றும் சங்ககாரவின் மனைவி ஆகியோர் போராட்டங்களில் நேரடியாகப் பங்கேற்றனர். சமூக ஊடங்கள் ஊடாக இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன மற்றும் வனிந்து ஹசரங்க, பானுக ராஜபக்ச ஆகியோரும் முன்னாள் வீரர் லசித் மலிங்கவும் இணைந்துள்ளனர்.

இதேவேளை- கொழும்பு தாமரைத் தடாகம் முன்பாக நேற்று இடம் பெற்ற போராட்டத்தில் சினிமா பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

(ஒ,5)

கேள்வி அறிவித்தல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2022

வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. இருப்பினும் வடமாகாணத்தின் நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நெடுஞ்சாலை அமைப்பிற்கான சீடா (CIDA) பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் (தொலைபேசி 024-2260914/024-2260055, தொலைநகல் 024-2260913, மின்னஞ்சல்-techvckps@gmail.com/cheddips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 05/04/2022 ஆம் திகதியிலிருந்து வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் இடத்திலிருந்து 05/04/2022 ஆம் திகதியிலிருந்து 26/04/2022 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/- (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் முகவரிக்கு 27/04/2022 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். கேள்வி மனுப்பத்திரத்துடன் சீடா (CIDA) புத்தகத்தின் ஒப்பந்தகாரரின் விபரம் மற்றும் நிறை வேற்றப்பட்ட ஒப்பந்த வேலைகளின் விபரம் அடங்கிய பக்கங்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 77 நாட்கள் வரையும் (13/07/2022) செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

தொ. இல	கேள்வி எண்	வேலை விபரம்	மதிப்பீட்டு தொகை (ரூபா மில்)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
						பிணை வைப்பு (ரூபா)	செல்லுபடியாகும் காலம்
01	NP/14/43(6)/5/3-2(04)/2022	தட்டாங்குளம் 2ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல்	6.02	91 நாட்கள்	C7,C6 வீதி	61,000.00	10/08/2022

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 12/04/2022 மு.ப 10.30 க்கு வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.

05.04.2022


(CR 37787) (3/6)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும்-2022

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டிற்கான ஸ்தாபகர் தினமும் பரிசில்நாளும் இன்று (05.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு.தே.பிரபாகரன் அவர்களின் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி மதனா சுந்தரலிங்கம் (பழைய மாணவர் சங்கத் தலைவர்-கனடா) அவர்கள் கலந்து சிறப்பிப்பதுடன் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை திரு.அப்புத்துரை ஆனந்தராசா (பழைய மாணவர் - யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, அதிபர் - யா/வட்டு இந்துக் கல்லூரி) அவர்கள் ஆற்றவுள்ளார்.

பாடசாலைச் சமூகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

தசாகக் கிரியை அறிவித்தல்



நித்தியானந்தக் குருக்கள்

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாகவும் கொண்ட ஜயாத்துரை ஜயர் சோமசுந்தரக்குருக்கள் புவனேஸ்வரி அம்மாவின் மூத்த புதல்வன் நித்தியானந்தக் குருக்கள் கடந்த (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் காலமானார். அவரது தசாகாதி கிரியைகள் இன்று (05.04.2022) செவ்வாய்க்கிழமை முதல் மலேசியாவில் நடைபெறும் என அறியத்தருவதோடு, தொலைபேசி மூலம் நேரடியாகவும் வந்து துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

(CS 19203) (4/6) குடும்பத்தினர்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
அறிவித்தல்

குடியியல் நடைமுறைக்கோவையின் இல:16 பிரிவு கீழான அறிவித்தல்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின்
பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம்

01. அருளம்பலம் மயில்வாகனம்
தலைவர்
02. சிதம்பரப்பிள்ளை இராசகுலசிங்கம்
செயலாளர்
03. சிவலோகதேவி லோகேஸ்வரன்
பொருளாளர்
மூவரும்
அருள்மிகு தாளையடி பிள்ளையார் கோயில்
பரிபாலனசபை
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

மனுதாரர்கள்

வழக்கு இல: நம்பிக்கைச் சொத்து / 38/ 2021

இந்நீதிமன்றத்தில் மேற்குறித்த மனுதாரர் நம்பிக்கைச் சொத்து சட்டத்தின் 112ம் பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று இதன்பின் காணும் ஆதனம் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்களை மேற்குறித்த மந்துவில் கிழக்கு பிரிவுக்குட்பட்ட "தாழையடி" என்ற ஆதனத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு தாழையடி பிள்ளையார் கோவில் சார்பில் சென்றடைதற் கட்டளைக்கு விண்ணபித்துள்ளபடியால் எவராவது ஆட்சேபனை ஏதுமிருப்பின் இந் நீதிமன்றில் 2022ம் ஆண்டு சித்திரை மாதம் 25ந் திகதி காலை 09.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2022ம் ஆண்டு பங்குனி மாதம் 02ந் நாளாகிய இன்று

வரைபு :
மனுதாரர் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்

ஆதன அட்டவணை "1"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் கிழக்கு இறை "தாளையடி" நிலப்பரப்பு 10 பத்து குளி 6.678 ஆறு தசம் ஆறு ஏழு எட்டு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 01.09.2012 திகதியில் 393ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்குக் கோவில் வீதி கோவிலும் இதடங்கலும்

ஆதன அட்டவணை "2"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் கிழக்கு இறை "தாளையடி" நிலப்பரப்பு 06 ஆறும் குளி 11.970 பதினொன்று தசம் ஒன்பது ஏழு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 01.09.2012 திகதியில் 393ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 02 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு அருள்சோதி நாதன் வன்னித்தம்பியின் ஆதனம், வடக்கு: கோவில் வீதி, மேற்கு: சிதம்பரநாதர் சச்சிதானந்தனுக்கும் பெண் லலிதாவுக்குமுரிய ஆதனம், தெற்கு: அருள்சோதிநாதன் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம், குளமும் இதடங்கலும்

ஆதன அட்டவணை 3"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று தாவளை இயற்றாலை இறை "கல்வாளைப்பிள்ளையாரடி வயல்" நிலப்பரப்பு 22 குளி 7.344 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 20.07.2012 திகதியில் 377ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு வல்லிபுரம் கந்தை யாவின் ஆதனம், வடக்கு : செல்லர் வல்லிபுரத்தின் ஆதனம், மேற்கும் தெற்கும்: மயில்வாகனம் தங்கரா ஜாவின் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "4"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் மேற்கு இறை "கும்பாவெளி வயல்" நிலப்பரப்பு 01 குளி 5.724 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 385ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் கட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: வேலன் சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கு: வேலன் சுந்தரத்தின் ஆதனம், மேற்கு: பொன்னன் நாகரத்தினத்தின் ஆதனம் தெற்கு: வேலன் நடேசனின் ஆதனம், இதடங்கலும்:

ஆதன அட்டவணை "5"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் மேற்கு இறை "கும்பாவெளி வயல்" நிலப்பரப்பு 02 குளி 8.592 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 385ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 02 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: S.இன்பசேகரம் பூமணியினதும் மறுபேர் களினதும் ஆதனம், வடக்கு : பொன்னன் நாகரத்தினத்தின் ஆதனம், மேற்கு: கதிரன் கந்தையாவினதும் மறுபேர்களினதும் ஆதனம் தெற்கு ஒழுங்கை , இதடங்கலும்.

ஆதன அட்டவணை "6"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் மேற்கு இறை "கும்பாவெளி வயல்" நிலப்பரப்பு 07 குளி 3.408 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 384ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு செல்லன் குலசேகரத்தினதும் மறுபேர்க ளினதும் ஆதனம், வடக்கு : குனிக்கிராய் குளக்கட்டும் குமரன் பாலசுப்பிரமணியத்தின் ஆதனமும் மேற்கு: குமரன் பாலசுப்பிரமணியத்தினதும் ஆதனம் தெற்கு: பொன்னன் நாகரத்தினத்தினதும் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "7"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "விளாங்குளி வயல்" நிலப்பரப்பு 29 குளி 4.176 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 381ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு தாமோதரம் சின்னையாவின் ஆதனம், வடக்கு : தம்பிமுத்து கந்தையாவினதும் செல்லம் குலசேகரத்தினதும் ஆதனங்கள், மேற்கு: பிள்ளையார் கோவில் ஆதனம் தெற்கு: வேலாயுதர் கந்தையாவினதும் செல்வநாயகம் தவநாயகத்தினதும் ஆதனங்கள், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "8"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று - மந்துவில் வடக்கு இறை "கல்லங்கன் வயல்" நிலப்பரப்பு 04 குளி 0.48 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 382ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கும் மேற்கும் V. ராஜாவினது ஆதனம், வடக்கு S.வேலாயுத்தின் ஆதனம் தெற்கு M. செல்லத்தம்பியின் ஆதனம் இதடங்கலும்

ஆதன அட்டவணை "9"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "கலலங்கன் வயல்" நிலப்பரப்பு 06 குளி 2.364 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 22.07.2012 திகதியில் 383ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும்: V.ராஜாவினது ஆத னங்கள், மேற்கு: S.தம்பையா வினது ஆதனம் இதடங்கலும்.

ஆதன அட்டவணை "10"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "சிலிந்தில் வயல்" நிலப்பரப்பு 20 குளி 5.82 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 24.07.2012 திகதியில் 388ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கும் தெற்கும்: வாய்க்கால், வடக்கு: விஸ்வ லிங்கம் இராசநாயகத்தினது ஆதனம், மேற்கு : குமாரசிங்கம் குணநாதனினதும் வல்லிபுரம் திருஞான சுந்தரத்தினதும் ஆதனங்கள் இதடங்கலும்,

ஆதன அட்டவணை "11"

படமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "புளியந்திடல் வயல்" நிலப்பரப்பு 11 குளி 0.516 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 24.07.2012 திகதியில் 386ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: சின்னக்குட்டி புவிநாயகத்தின் ஆதனம், வடக்கு : கந்தையா செல்லத்தம்பியின் ஆதனம், மேற்கு: வேலாயுதபிள்ளை முருகனினதும் வல்லிபுரம் நாகேஸ்வரனினதும் ஆதனங்கள் தெற்கு: வாய்க்கால், இதடங்கலும்,

ஆதன அட்டவணை "12"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "சிலிந்தி வயல் அல்லது புளியந்திடல் வயல்" நிலப்பரப்பு 00 குளி 8.052 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 24.07.2012 திகதியில் 387ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கும் வடக்கும்: வல்லிபுரம் நாகேஸ்வரனின் ஆதனம், மேற்கு: இளையதம்பி செல்லக்கண்டுவின் ஆதனம் தெற்கு: நல்லையா வைத்திலிங்கத்தின் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "13"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "சிலிந்தி வயல் அல்லது புளியந்திடல் வயல்" நிலப்பரப்பு 04 குளி 4.908 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 24.07.2012 திகதியில் 387ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 02 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: விஸ்வலிங்கம் இராசநாயகத்தின் ஆதனம், வடக்கும் மேற்கும்: நல்லம்மாப்பாணர் மாணிக்கவாசகரின் ஆதனங்கள், தெற்கு செல்வநாயகம் சிவநாயகத்தின் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "14"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "கம்பிளி வைரவர் கோவிலடி வயல்" நிலப்பரப்பு 17 குளி 0.516 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 20.07.2012 திகதியில் 380ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு: கம்பிளி வைரவர் கோவிலுக்குரிய ஆதனமும் வேறு ஆதனங்களும், மேற்கு: வேலுப்பிள்ளை நடராஜாவின் ஆதனம் (தெற்கு சின்னத்தம்பி கந்தையாவின் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "15"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "மல்லிக்கிராய் வயல்" நிலப்பரப்பு 16 குளி 7.80 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 20.07.2012 திகதியில் 379ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: கந்தையா கனகசபையின் ஆதனம், வடக்கு: தாமோதரம்பிள்ளை அமரசிறியின் ஆதனம், மேற்கு: தாமோதரம்பிள்ளை நிற்சிங்கத்தினது ஆதனம் தெற்கு: கந்தசாமி சரஸ்வதியின் ஆதனம், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "16"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "மல்லிக்கிராய் வயல்" நிலப்பரப்பு 11 குளி 6.456 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 20.07.2012 திகதியில் 378ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: முத்துக்குமார் நடராசாவின் ஆதனம், வடக்கு: முத்துக்குமார் சிற்றம்பலத்தினதும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு: சின்னவன் கனகரத்தி னத்தின் ஆதனம் தெற்கு: சின்னவன் கனகரத்தினத்தின் ஆதனமும் சிவநாயகம் நிவேதினியின் ஆதனமும், இதடங்கலும்,

ஆதன அட்டவணை "17"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று தாவளை இயற்றாலை இறை "பரவை வயல்" நிலப்பரப்பு 10 குளி 0.768 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 24.07.2012 திகதியில் 389ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் கட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: பிள்ளையார் கோவில் ஆதனம், வடக்கு: சின்னக்குட்டி தியாகுவின் ஆதனம், மேற்கு: செல்லர் கணபதிப்பிள்ளையின் ஆதனம் தெற்கு: விஸ்வ லிங்கம் இராசநாயகத்தின், இதடங்கலும்.

ஆதன அட்டவணை "18"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் கிழக்கு இறை " குருக்கள் வளவு" நிலப்பரப்பு 04 குளி 7.80 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 03.08.2012 திகதியில் 391ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: தங்கவடிவேல் பரமேஸ்வரியின் ஆதனம், மேற்கு: கிருஸ்ணகோபால் இராஜேஸ்வரியின் ஆதனம் தெற்கு: றோட்டு, இதடங்கலும்.

ஆதன அட்டவணை - "19"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மந்துவில் வடக்கு இறை "கம்பிளியன் தோட்டம்" நிலப்பரப்பு 34 குளி 1.908 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.ஏரம்பு அவர்களால் 20.07.2012 திகதியில் 390ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 ஆகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு: கையாலயபிள்ளை தவமணிதேவியின் ஆதனம், வடக்கும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை , இதடங்கலும்.

ஆதன அட்டவணை "20"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்ற தாவளை இயற்றாலை இறை " அம்பலா வளவு" நிலப்பரப்பு 08 குளி 10 . இதற்கெல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு : சிவப்பிரகாசம் மனோரஞ்சிதத்தின் ஆதனம், மேற்கு: ஞானசேகரம் மகேஸ்வரனின் ஆதனம் தெற்கு: பொன்னையா சூரியகுமாரின் ஆதனம், இதடங்கலும்,

ஆதன அட்டவணை "21"

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி வரணிக் கோவிற்பற்று சாவகச்சேரி பிரதேச சபை மந்துவில் இறை "தாளையடியும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 08 எட்டு இதற்கெல்லை கிழக்கு: குறித்த தாளையடிப் பிள்ளையார் கோயிலுக்குரிய ஆதனம், வடக்கு: தெரு, மேற்கு : யாழ் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலத்துக்குரிய ஆதனம் தெற்கு: சச்சிதானந்தம் பெண் லலிதாவுக்குரிய ஆதனம், இதடங்கலும்

நீதிமன்றின் கட்டளைப்படி,
பதிவாளர்

(CS 43967) (3/6)

சேவை நலன் பாராட்டு





எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன்
கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற

திருமதி பத்மகுமாரி கதிரேசன்

திருமதி மாலினி அன்ரன் ஜோக்குமார்

யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பள்ளியிலே
சின்னஞ்சிறு பாலரின் அன்னையராக
அன்போடு அரவணைத்து அரிய கல்விதந்து
பண்போடு வழிநடத்திப் பாங்குறசேவை
நல்கிய எங்கள்

Best Wishes **பத்மகுமாரி கதிரேசன்,** Best Wishes

மாலினி அன்ரன் ஜோக்குமார்

ஆசிரியைகள் பரம்பொருளின் துணைகொண்டு
பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

(cs43960) (2.6)

மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா
பெறுகை அறிவித்தல்
அழுக்குத் துணிகளை சலவை செய்தல்
சேவை – 2022 / 2023

வவுனியா பொது வைத்தியசாலையின் 2022 / 2023 ஆம் ஆண்டிற்குரிய அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவைக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இல	விபரம்	கேள்வி இல	மீளளிக்கப்படாத வைப்புத் தொகை	கேள்விப் பிணை
01.	அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவை	NP/04/43/DGHV/03/ FM07/LS/2022	2,000.00	Rs.20,000.00

1. பெறுகை ஆவணங்கள் 05.04.2022 தொடக்கம் 18.04.2022ம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 08.30 மணி தொடக்கம் மாலை 03.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. மீளளிக்கப்படாத வைப்புக்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்தி (ரூபா 2,000.00) பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து கேள்விப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப்பதிவினையும் தொழில் தொடர்பான அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 18.07.2022 வரை செல்லுபடியாகக்கூடிய ரூபா 20,000.00 பெறுமதியான பிணைப் பொறுப்பொன்று பெறப்பட்டு கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
5. பிரதியுடன் கூடிய சகல பெறுகை ஆவணங்களும் "தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, கண்டி வீதி, வவுனியா" என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2022 / 2023 ஆம் ஆண்டிற்கான அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவை வழங்கல்" என குறிப்பிடப்படல் வேண்டும்.
6. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 19.04.2022ம் திகதி காலை 10.00 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
7. பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் 19.04.2022ம் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரம் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.
9. பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.

Dr. J.M.நிலக்கூஷன்,
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா.
024-2228094, Fax: 024-2222262.
Email: acctghv@gmail.com

(cr.37793) (2.6)

ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம் - மல்லாகம்
விண்ணப்பதாரியின் பெயர் - திரு . அம்பலவாணர் இரத்தினசிங்கம்
முகவரி - கோணப்புலம் வீதி, மல்லாகம்.
ஆதன உரிமை யாளரின் பெயர் - துரைசிங்கம் கஜன் பெண் கீதா

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று, மல்லாகம் இறை "கொட்டையடி" என்ற ஆதனமானது வட்டாரம் - 20 கோணப்புலம் வீதியில் பதிவில் காணப்படவில்லை. குறித்த ஆதனத்தை பிரிசித்த நொத்தாரிஸ் ந. தம்பிமுத்தன் முகதாவில் 5084ம் இலக்க 07.08.2005ம் திகிதிய வெளிப்படுத்தல் உறுதியின் மூலம் அம்பலவாணர் இரத்தினசிங்கமும் பெண் சறோஜினிதேவியும் வெளிப்படுத்தி உள்ளனர். குறித்த உறுதியில் தமது பெரிய தாயாரான வயிரவநாதன் கைம்பெண் கனகநாயகியம்மாவிற்கு இருந்து அவர் சந்ததியற்று இருந்தமையால் இரத்தினசிங்கம் சறோஜினிதேவியின் தாயாரான சின்னத்தம்பி பெண் சௌந்தரநாயகியம்மா என்பவருக்கு வாய்மொழி மூலம் நன் கொடையாக கொடுத்திருந்தார் என்றும் அதற்கான எழுத்து மூலம் ஆவணம் எவையும் இல்லை எனவும் அவரும் இறக்க அவரின் வாய்மூலமான நன் கொடையாக இரத்தினசிங்கம் சறோஜினிதேவிக்கு வந்ததெனவும் வெளிப்படுத்தி உள்ளனர். பின்னர் அம்பலவாணர் இரத்தினசிங்கம் பெண் சறோஜினிதேவி ஆகியோர் பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் 12.04 2006, 26.03.2013ஆம் திகதிய 55219114 இலக்க சீதன. நன்கொடை உறுதி மூலம் துரைசிங்கம் கஜன் பெண் கீதா என்பவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

ஆதனவிபரம்
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையுமான "கொட்டையடி" என்ற நிலப்பரப்பு 09 குழி 05.3. இது நில அளவையாளர் M.சிற்றம்பலம் அவர்களால் வரைந்த 5071/05.02.2022 இலக்க வரைபடத்தில் துண்டு 01.02 என காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லைகள்,
கிழக்கு - தியாகராஜா பெண் மனோண்மணியின் ஆதனம்,
வடக்கு - பகீரதன் பெண் சுவர்ணகலாவினதும் இரத்தினசிங்கம் பெண் சறோஜினி தேவியின் ஆதனமும் பாதையும்
மேற்கு - சேனாதிராஜா பெண் சாந்தாம்மாளின் ஆதனம்.
தெற்கு - ஒழுங்கை

இவ்வாதனத்தை துரைசிங்கம் கஜன் பெண் கீதா என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங்களை சமர்ப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து ஆதனத்தை உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS 43974) (3/6)

ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம் - மல்லாகம்
விண்ணப்பதாரியின் பெயர் - திரு அம்பலவாணர் இரத்தினசிங்கம்
முகவரி - கோணப்புலம் வீதி, மல்லாகம்.
ஆதன உரிமையாளரின் பெயர் - கந்தசாமி பகீரதன் பெண் சுவர்ணகலா

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று, மல்லாகம் இறை "கொட்டையடி" என்ற ஆதனமானது வட்டாரம் - 20 கோணப்புலம் வீதியில் பதிவில் காணப்படவில்லை.
குறித்த ஆதனத்தை பிரிசித்த நொத்தாரிஸ் ந. தம்பிமுத்தன் முகதாவில் 5084ம் இலக்க 07.08.2005ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியின் மூலம் அம்பலவாணர் இரத்தினசிங்கமும் பெண் சறோஜினிதேவியும் வெளிப்படுத்தி உள்ளனர். குறித்த உறுதியில் தமது பெரிய தாயாரான வயிரவநாதன் கைம்பெண் கனகநாயகியம்மாவிற்கு இருந்து அவர் சந்ததியற்று இருந்தமையால் இரத்தின சிங்கம் சறோஜினிதேவியின் தாயாரான சின்னத்தம்பி பெண் சௌந்தரநாயகியம்மா என்பவருக்கு வாய்மொழி மூலம் நன்கொடையாக கொடுத்திருந்தார் என்றும் அதற்கான எழுத்து முலம் ஆவணம் எவையும் இல்லை எனவும் அவரும் இறக்க அவரின் வாய் மூலமான நன்கொடையாக இரத்தினசிங்கம் சறோஜினிதேவிக்கு வந்ததெனவும் வெளிப்படுத்தி உள்ளனர். பின்னர் அம்பலவாணர் இரத்தின சிங்கம் பெண் சறோஜினிதேவி ஆகியோர் பிரசித்த நொத்தாரிஸ் கதிரிப்பிள்ளை சபாரத்தினம் முகதாவில் 05.08.2009 ஆம் திகதிய 2789 இலக்க சீதன உறுதி மூலம் கந்தசாமி பகீரதன் மனைவி சுவர்ணகலாவிற்கு வழங்கியுள்ளனர்.

ஆதனவிபரம்
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையுமான கொட்டையடி என்ற நிலப்பரப்பு 08 குழி 09.00, இது நில அளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் வரைந்த 738 இலக்க வரைபடத்தில் துண்டு 01 என காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லைகள்.
கிழக்கு - இரத்தினசிங்கம் பெண் சறோஜினி தேவியின் ஆதனம்.
வடக்கு - ஒழுங்கை
மேற்கு - சேனாதிராஜா பெண் சாந்தாம்மாளின் ஆதனம்.
தெற்கு - துரைசிங்கம் கஜன் பெண் கீதாவின் ஆதனம்.

இவ்வாதனத்தை கந்தசாமி பகீரதன் மனைவி சுவர்ணகலா என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங் களை சமரப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து ஆதனத்தை உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS 43975) (3/6)

மஹிந்தவின்....

தாக்குதல் மேற்கொண்டனர்.

நேற்று பிற்பகல் வேளையில் அதிகளவான ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்காலை நகரில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கார்ல்டன் இல்லத்தை நோக்கி பேரணியாக செல்ல முயற்சித்தனர். இதன்போது, வீதித் தடைகளைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை இடைநடுவே நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் கார்ல்டன் இல்லத்துக்கு செல்ல தொடர்ந்து முயற்சித்தனர். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகை தாக்குதல் மேற்கொண்டனர். ஆனாலும், பொலிஸார் மீது திருப்பித் தாக்குதல்களை மேற்கொண்டும், வீதித் தடைகளை தகர்த்தும் முன்னநகர்ந்து சென்றனர் போராட்டக்காரர்கள். இருப்பினும், பிரதமரின் இல்லத்துக்கு மிக நெருக்கமாக வைத்து பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை மடக்கி வெளியேற்றினர். (ஒ-இ)

நொருக்கப்பட்டது....

வின் வீடு நேற்றிரவு போராட்டக்காரர்களால் அடித்து நொருக்கப்பட்டது. அதேவேளை, பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது பிக்கு ஒருவர் மீது பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிக்கு காயமடைந்துள்ளார்.. (ஒ-5)

போராட்டக்காரர்களுடன்...

ஒருவர் இணைந்து போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளார்.

'சீருடை அணிந்திருந்தாலும் நாங்களும் மக்களுடன் இருப்போம்' என்று பொலிஸ் அதிகாரி ஒலிப்பெருக்கியில் அறிவித்துள்ளார். இந்த நிலையில் பொலிஸ் அதிகாரியை மக்கள் ஆரவாரம் செய்து கைகளை தட்டி பாராட்டியுள்ளனர். அடுத்து வரும் ஆர்ப்பாட்டங்களில் முப்படையினரும் தம்முடன் இணைந்து அரசுக்கு எதிராக போராட முன்வர வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-இ)

வேலையாட்கள் தேவை

பளையில் அமைந்துள்ள
தென்னந்தோட்டத்திற்கு
வேலையாள்கள் தேவை. அத்துடன்
உழவு இயந்திரம் இயக்கக்
கூடியவர்களும் தேவை.

077 183 2404

ne 18235) (2.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில்



2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **158** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த **செல்வன் கோகுலன் பதுசியன்** அவர்களையும் **100** புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

Congratulations

து.விசாலி	**- 141**	**பா.தனுசியா**	**- 121**
ஜெ.தக்சன்	**- 125**	**கோ. பிருத்திகா**	**- 118**
வி.லவீனன்	**- 125**	**ஜெ.பக்ஷன்**	**- 118**

கா.டனுசன் - 117

ஆகியோரையும் பயிற்றுவித்த ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
யா/ மந்துவில் ஸ்ரீ பராதி வித்தியாலயம்
பாடசாலை சமூகம்.

(CR 37693) (4/6)

மேற்பார்வையாளர் வெற்றிடம்

இயக்கச்சியிலுள்ள
எமது விவசாயப் பண்ணைகளை
மேற்பார்வை செய்வதற்கு
மேற்பார்வையாளர் தேவை.
தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்

சிவபூமி விவசாயப் பண்ணை நெல்லியான் சுழிபுரம்

எமது பண்ணையில் பின்வரும் வெற்றிடம்
1. மேற்பார்வையாளர்
2. பண்ணையில் தங்கியிருந்து பராமரிப்பவர்

சிவபூமி நாய்கள் சரணாலயம் இயக்கச்சி

நாய்களை அன்பாகப் பராமரிக்கக் கூடியவர்கள் தேவை.
குடும்பமாகத் தங்குவதற்கு வசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசலாம்.

நிர்வாகசபை
சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொலைபேசி: **021 222 7938**

(cs 43960) (2.6)

விலைமனுவிற்கான அழைப்பு (IFB)
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2022

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு,பொதுநிதி சுற்றறிக்கை இல.04/2016(II) இற்கு அமைவாக இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப் படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் (Schedule -5) காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/ செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 மின்னஞ்சல் முகவரி : chavakachcherips1@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2022.04.05 தொடக்கம் 2022.04.25 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணிமுதல் 15:00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2022.04.05 ஆம் திகதியிலிருந்து 2022.04.26 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2022.04.26 ஆம் திகதி மாலை 14:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

9. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2022.04.12 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது ழீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

No	Contract No	Description Work	Estimated cost Rs. (Million)	Contract Period	Required Grade	Validity period of bid from the last date bid submission	Required Bid Security	
							Security Amount	Validity Period
1	NP/14/41(6)/2/ PSDG/ 2022/01	Construction of Vakaiyadi Road at Sarasalai South	3.28 Mn	90 Days	C8/C7 (Road Construction)	63 Days	33,000.00	25.07.2022

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
2022.04.05

(cr 37786) (2.6)

மரண அறிவித்தல்



தோற்றம்
14
06
1969

மறைவு
02
04
2022

திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன்
{B.Sc. Eng (Hons), ACMA}

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும்
கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட
திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் {B.Sc. Eng (Hons), ACMA}
02.04.2022 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரத்தினசிங்கம் (இலங்கை மத்திய வங்கி) மற்றும் வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் கனிஷ்ட புதல்வரும், காலம் சென்றவர்களான குலரத்தினம் புஷ்பராணி தம்பதிகளின் அருமை மருமகனும், ரஜினியின் அன்பு கணவரும், யதுஷா, விதுஷன், மிதுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், Dr.ஜனகன், சுரேந்திரன் (பொறியியலாளர்), ஜசோதா (USA) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுபோதினி, யசோதா, விநாயகமூர்த்தி (USA), தர்ஷினி (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன், ஆனந்தசிகாமணி, சிவக்கொழுந்து மற்றும் தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், பூலோகசிங்கம் மற்றும் விக்னராஜா, செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 06 .04 .2022 புதன்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு தகன கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

தகவல்:- ந.சுரேந்திரன் (சகோதரன்) - வா. விதுஷன் (மகன்)

அரசியல்...

இந்த மாதத்துக்கான நாடாளுமன்றக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. அரசை வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் வலியுறுத்துகின்றனர். ஆளும் கட்சியினரின் வீடுகள் முற்றுகையிடப்பட்டுள்ளன. இதனால் ஆளும் கட்சியிலிருந்து பல தரப்பினரும் வெளியேறத் தயாராகியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ள அதேவேளை, ஆளும் கட்சியிலுள்ள பல தரப்புக்களும் இன்றைய தினம் எதிரணியில் அமர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சாதாரண 113 என்ற பெரும்பான்மையை சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசு இழந்து கவிழும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாடு முழுவதும் கூடு பிடித்துள்ள போராட்டங்களின் ஒரு பகுதியாக, நாடாளுமன்றமும் இன்று முற்றுகையிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால், சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்தின் பாதுகாப்புத் தொடர்பான விசேட கூட்டம் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5,44)

பதவி...

யுள்ள நிலையில், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து தானும் பதவி விலகத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அவரது தனிப்பட்ட ருவிற்றரில்;, தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிய ஆளுநராக மத்திய வங்கியின் முன்னாள் மூத்த பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது அவுஸ்திரேலியாவில் இருக்கும் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம்மாதம் 7ஆம் திகதி இலங்கை வரவுள்ள அவர், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்பது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் உள்ளகத் தகவல்களில் இருந்து அறியமுடிகிறது. (ஒ-இ)

4 அமைச்சர்கள்...

அமைச்சர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று நியமித்துள்ளார். இதற்கு அமைவாக நீதி அமைச்சராக இருந்த அலி சப்ரி புதிய அமைச்சரவை நியமனத்தில் பஸில் ராஜபக்சவின் நிதி அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளார். ஏனைய மூவரும் முன்னைய அமைச்சுக்களையே திரும்பவும் பொறுப்பேற்றுள்ளனர்.

கல்வி - தினேஷ் குணவர்தன, வெளி நாட்டலுவல்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நெடுஞ்சாலைகள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ. (ஒ-இ)

69 லட்சம்...

எனவே, அவருக்கு பதவி விலக வேண்டிய தேவை இல்லை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிதி அமைச்சுப் பதவி, வெளிவிவகார அமைச்சுப் பதவி என்பன முக்கியமானவை. அதேபோல நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சபை முதல்வர் மற்றும் பிரதம கொறடா பதவிகளும் அவசியம். அதனால்தான் ஜனாதிபதி நால்வருக்கு அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளார். விரைவில் புதிய முகங்களுடன் புதிய அமைச்சரவை மலரும் என நம்புகின்றேன். ஜனாதிபதிக்கு 69 லட்சம் பேர் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, அவர் பதவி விலக வேண்டியதில்லை. எனக்கும் மக்கள் பலம் இருக்கின்றது.

தேர்தலொன்று வந்தால் தெரியவரும். மக்கள் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் கட்சிகளும், அடிப்படைவாதிகளும் உள்ளனர்-என்றார். (ஒ-44)

பெரும்பான்மையை...

கத் தயார் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்தார், என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அமைச்சர்கள் நேற்று முன்தினம் கூண்டோடு இராஜினாமா செய்தனர். இந்நிலையில் அத்தியாவசியமென கருதப்படும் நான்கு விடயதானங்களுக்கு நேற்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்பின்னர் ஆளுங்கட்சியின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமார் 132 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பிரசன்ன ரணதுங்க, நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்கள் என்ற சாதாரண பெரும்பான்மை நிரூபிக்கும் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தயார் என ஜனாதிபதி குறிப்பிட்டார். அத்துடன், சகல அரசியல் கட்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். எதிரணிகளின் பிரதிபலிப்புக்காக காத்திருக்கின்றோம்- என்றார். (ஒ-44)

மஹிந்தவை...

தைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதற்கு அமைய பிரதமர் உள்ளிட்ட 42 பேரையும் எதிர்வரும் 8ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

அரசிலிருந்து...

தீர்மானித்துள்ளது. சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன ஆகியோர் தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சுதந்திரக்கட்சி பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர இராஜாங்க அமைச்சு பதவியை நேற்றுமுன்தினம் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)



ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைய போராட்டக்காரர்கள் முயற்சி

இராணுவம் குவிப்பு; பெரும் பதற்றம்

கொழும்பு, ஏப். 5

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்னிரவு ஆரம்பித்த போராட்டம் நள்ளிரவு தாண்டியும் முன்னெடுக்கப்பட்டுகொண்டிருக்கின்றது. போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு உள்நுழைய முற்பட்டதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டக்காரர்களுடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அங்கு பதற்றமான சூழலே நிலவுகின்றது. (ஒ-5)

கோத்தாவின்...

அனைத்தும் ஒருசேர நிராகரித்துள்ளன. 'அனைத்து குடிமக்கள் மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்காக, தேசிய தேவை எனக் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது. அதற்காக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டு, தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்றிணையுமாறு, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்' என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுக் காலை அறிக்கை வெளியிட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி என எதிரணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்துள்ளன. (ஒ-44)

திரும்பும்...

துப் பாகங்களிலும் நேற்றைய நாள் முழுவதும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பில் நேற்று இரவு முன்னெடுக்கப்பட்ட பெரும் எடுப்பிலான போராட்டத்தால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி மக்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசை வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் கோருகின்றனர். கடந்த 31ஆம் திகதி இரவு ஜனாதிபதியின் மீரிஹான இல்லத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஜனாதிபதியின் இல்லம் தாக்குதலுக்கு உள்ளானதுடன், ஜனாதிபதி கோத்தாபய தப்பியோட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து 36 மணி நேர ஊரடங்கும் அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு நாளிலும் நாடு முழுவதும் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. மக்கள் போராட்டங்களை மழுங்கடித்து திசை திருப்பும் வகையில், அமைச்சர்கள் பதவி விலகுவதாக நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது.

ஆனாலும், அரசின் இந்த ஏமாற்று நாடகங்களுக்கு இடம்கொடாத மக்கள் நேற்றும் போராட்டங்களை மேற்கொண்டனர். நாடு முழுவதும் இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. வீதிகளில் கைக் குழந்தைகளுடனும் போராட்டங்களில் ஈடுபட்டனர். அத்துடன் சிங்கள மக்களின் 'பெப்பரே' இசையுடன் ராஜபக்சக்களுக்கு எதிரான கோஷங்களும் எழுப்பப்பட்டன. பல இடங்களில் பொலிஸார் போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினர்.



இதேவேளை நேற்று இரவு கொழும்பில் போராட்டங்கள் உச்ச எழுச்சி பெற்றன. காலிமுகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகம் முன்பாக பல்லாயிரக்கணக்கானோர் திரண்டனர். இதனால் போக்குவரத்து முடக்கப்பட்டது. சுதந்திர சதுக்கம், விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமரின் இல்லம் என்பனவும் போராட்டக்காரர்களால் நிரம்பி வழிந்தது. கொழும்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் நேற்று இரவிரவாக போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் வீதிகளில் பயணங்கள் தடைப்பட்டன. அத்துடன் மின்சாரம் நிறுத்தப்பட்டபோது, கைத்தொலைபேசி வெளிச்சங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. (ஒ-5)

அடிப்படைவாதத்தை தூண்டுவதற்கு போராட்டங்களைப் பயன்படுத்தும் அரசு

குற்றஞ்சுமத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 5

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றவாளிகள் அல்லர். எனவே கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் நிபந்தனைகள் இன்றி விடுதலை செய்யப்படவேண்டும். ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அரசும் அடிப்படைவாதத்தை தூண்டுவதற்கு முயற்சிக்கிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும், அரசு சுகபோகங்களை அனுபவிப்பதை நிறுத்தவில்லை. மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் குரல் கொடுப்பதற்கும் அரசும் தயாராக இல்லை. மாறாக மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறைகள் ஊடாக முடக்குவதற்கே முயற்சிக்கிறது.

மிரிஹான பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மாத்திரமின்றி ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களை முதலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைப்பதற்கு முயற்சித்த அரசாங்கம், பின்னர் பொதுச்சொத்து பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

இவ்வாறான செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்கவேண்டாம் என்று அரசை வலியுறுத்து கின்றோம்.

அடக்குமுறைகள் ஊடாக மக்களின் குரலை முடக்கமுடியாது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் கைது செய்யப்பட்டவர்கள் குற்ற வாளிகள் அல்லர்.

அவர்கள் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

உண்மையான குற்றவாளிகள் அரசிலேயே இருக்கின்றனர். சட்டத்தின் வரைவின் மூலம் மக்களைக் கட்டுப்படுத்தமுடியாது. காரணம் சட்டத்துறையும் மக்களுடனேயே இருக்கிறது. மக்களை எதிர்கொள்ள முடியாத கட்டத்தில்தான் இந்த அரசும் இருக்கின்றது - என்றார். (ம)

காரைநகர் பகுதியில் மிதிவெடிகள் மீட்பு

காரைநகர்- தோப்புக்காடு பகுதியில் 4 மிதிவெடிகள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் காணி உரிமையாளர் அத்திபார கட்டுமானத்துக்கான நிலத்தை வெட்டும்போது சந்தேகத்துக்கிடமான பொருளை அவதானித்த நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மிதிவெடியை அடையாளம் கண்ட நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் அது மீட்கப்பட்டது. (ச-125)

வேலை ஆட்கள் தேவை
யாழ். நகரில் உள்ள பிடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் அனுபவம் உள்ள பில் கிளார்க் (சிட்டை போடுபவர் உடன் தேவை) (CS 19202) (4/6)
தொடர்புக்கு:- 077 748 8093

ஆங்கில பிரத்தியேக வகுப்புக்கள்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்
077 658 9443 யாழ்ப்பாணம் (CS 19104) (2/6)

துப்புரவுப் பணியாளர் தேவை
யாழ். அக்ஷதை உயர்தர சைவ உணவகத்திற்கு துப்புரவுப் பணியாளர் தேவை.
தொடர்புக்கு:- 077 711 2269 (CS 19195) (4/6)

காணி விற்பனைக்கு
திருநெல்வேலி (ஆடியபாதம் வீதியிலிருந்து -100m தூரம்) பகுதியில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு:-077 390 2994, 077 321 5353 (CS 19196) (4/6)

விற்பனைக்கு
TATA XENON 2018 MODEL NON AC கொக்குவில் இல் விற்பனைக்கு உண்டு. (CR 37794) (3/6)
077 755 6244/ 077 758 3208

STUDENT VISA – 2022
1) Child education 5–17 years (both parent can go with the children)
2) Student Visa with the work
a. Canada UK – IELTS (6 – 6.5) and Australia
b.Europe Countries (Germany,Swiss,Italy.France etc…)IELTS. தேவையில்லை
Intake Sep 2022
Still open for registration
Application now in process - Register now
Minimum qualifications – A/L
குறைந்த கட்டணத்தில் வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.
Visa Consultant:-
Adiyapatham Road, Thiruvelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com

அமைதியான போராட்டங்களுக்கு எதிரானவர்கள் அல்லர் நாங்கள்

நியாயப்படுத்துகிறார் ஜோன்ஸ்டன்

எமது ஜனாதிபதி மிகவும் ஜனநாயகமான தலைவர். அவர் அமைதியான போராட்டங்களுக்கு ஒருபோதும் பிரச்சினையை ஏற்படுத்தாத தலைவர். ஆனால், இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்முறை உள்ளது. இது அமைதியான போராட்டமாகத் தெரியவில்லை இவ்வாறு ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்முறை கலந்து இருந்ததாலே அரசு மற்றும் தனியார் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இந்த வன்முறையில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சரவை அமைச்சர்கள் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். நாங்கள் அமைதியான போராட்டங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் வன்முறைகளை அனுமதிக்க முடியாது. நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும். மேலும், பொதுச் சொத்துக்களும் பாதுகாக்கப்பட வேண்டும், அது அரசின் கடமை. ஜனாதிபதியிடம் நாம் முன்வைத்த கோரிக்கை அது. அவர் எப்போதும் ஜனநாயகத்தைப் பற்றியே பேசினார்.

நாங்கள் ஒருபோதும் வன்முறைக்கு அடிபணிய மாட்டோம், அதுதான் யதார்த்தம். ஆனால், நாங்களும் காலிமுகத்திடலுக்கு வந்தோம். அரசை கண்டித்தும் போராட்டம் நடத்தினோம். ஒரு கல்லையாவது எறிந்தோமா? இதன் பின்னணியில் எவர் இருக்கிறார்கள் என்பது இப்போது தெளிவாகிவிட்டது -என்றார்.. (ம-20)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் 147 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
A-9 பிரதான வீதியில் அமைந்துள்ளது. நிறுவனங்கள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் திருமண மண்டபம் அமைப்பதற்கு ஏற்ற வசதியான இடம். நல்ல தண்ணீர்.
பார்வையிடும் நேரம்: காலை 6.00 – மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை.
(ஒரு பரப்பின் விலை 10 லட்சம் ரூபாய்)
தொடர்பு:- ஜெயம்: 077 241 7589 (CS 43977) (3/6)

மேற்பார்வையாளர் தேவை
கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்தில் தங்கி நின்று வேலை செய்ய அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை. வயதெல்லை 30 - 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும். (CS 43973) (3/6)
021 222 8490/021 721 0910

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 45 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 160 தென்னைகள் உள்ளன.
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)
ஜெயம்:- 077 814 7389

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.